# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT

# 2024

## ටවර් හෝල් රඟහල පදනම
## டவர் மண்டப அரங்க மன்றம்
## Tower Hall Theatre Foundation

බුද්ධශාසන ආගමික හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு
**Ministry of Buddhasasana Religious and Cultural Affairs**

# உள்ளடக்கம்


**<u>அத்தியாயம் 01</u>**

**<u>நிறுவனம் பற்றிய குறிப்பு/நிறைவேற்று சுருக்கம்</u>**

1.1 அறிமுகம் ........................................................ 92-93
1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் ........................ 94
1.3 முக்கிய கருமபணிகள்........................................................ 95
1.4 நிறுவனக் கட்டமைப்பு........................................................ 96
1.5 டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் கீழ் இயங்கும் பிரதான பிரிவுகள். 97

**<u>அத்தியாயம் 02 - முன்னேற்றமும் தூரநோக்கும்</u>................................................** 98-125

**<u>அத்தியாயம் 03 - குறித்த ஆண்டின் ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகை</u>**

3.1 நிதிசார்ந்த செயலாற்றுகைக் கூற்று........................................................ 126-127
3.2 நிதி நிலை பற்றிய கூற்று........................................................ 127-129
3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று........................................................ 130-132
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்........................................................ 132-157
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை........................................................ 157
3.6 ஒதுக்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கான செயலாற்றுகை ........................................................ 158
3.7 நி.பி.கு. 208 இன் பிரகாரம், இந்த மன்றத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடு…………………........................................................ 158
3.8 நிதி சாராத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை....... 158-159
3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை............................................. 160-167

**<u>அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்</u>**

4.1 செயலாற்றுகை சுட்டிகள்........................................................ 168-171

**<u>அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை</u>**

5.1 இனங்காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி இலக்குகள்......... 172
5.2 நிலையான அபிவிருத்திகள் சாதனையும் சவால்களும்.................. 173-175

**<u>அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய குறிப்பு</u>**

6.1 ஆளணி முகாமைத்துவம்........................................................ 176-180
6.2 மன்றத்தின் செயலாற்றுகையை மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை பாதிக்கும் விதம் ........................................................ 180-181
6.3 மனித வளங்கள் அபிவிருத்தி ........................................................ 181-182

**அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை...............................................** 183-198

# அத்தியாயம் 01
## நிறுவனம் பற்றிய குறிப்பு / நிறைவேற்று சுருக்கம்
### 1.1 அறிமுகம்

### *அறிமுகம்*

தேசிய நாட்டிய செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல், நாடகம், நாட்டியம் மற்றும் இசை முதலியன அடங்கலாக கலை நிகழ்ச்சிகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அத்தகைய ஆராச்சிகளை ஊக்குவித்தல் மற்றும் டவர் மண்டப திரையரங்கை ஒரு தேசிய நாட்டிய நிலையமாகப் பயன்படுத்துதல் ஆகிய நோக்கத்தின் நிமித்தம் தாபிக்கப்பட்ட இந்த டவர் மண்டப திரையரங்கு மன்றம், 1978 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஐந்து நோக்கங்களை அடைவதற்காக தாபிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகும்.

டவர் மண்டப திரையரங்கு மன்றம், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவப் பிரதமர் தலைமையிலான பதினைந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் குழுவினால் நிர்வகிக்கப்படுகின்றது.

டவர் மண்டப திரையரங்கு மன்றம் 2024 ஆம் ஆண்டு முழுவதும் பல நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தியது.

- இந்த ஆண்டு டவர் மண்டப நாடக கல்லூரியில் சிங்கள மொழி மூல பாடநெறிக்கு 67 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஆம்பிக்கப்பட்டுள்ள தமிழ் மொழி மூல பாடநெறிக்கு 45 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

- அதன்படி, சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலிருந்து 112 மாணவர்கள் இலங்கை நாடகம் மற்றும் நிகழ்த்து கலைத் துறைக்கு புதிய பயிற்சியாளர்களாக சேர்க்கப்பட்டனர். மேலும், SLQF 3 மற்றும் 4 ஆகியவற்றை நிறைவு செய்த 96 மாணவர்களுக்கு நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- இலங்கையில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்சார் நடிப்பு பாடநெறிக்கு (நடிகர் - NVQ 04) 27 மாணவர்கள் நேர்முகப்பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் தமது படிப்புகளை தொடங்கினர். இது நாடகம், தொலைக்காட்சி நாடகம், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றுக்கு தேவையான பயிற்சி பெற்ற தொழில்தேர்ச்சி பெற்ற நடிகர்களை உருவாக்குகின்றது.
  இந்த திரையரங்கு மன்றத்திற்கு பார்வையாளர்களை ஈர்ப்பதையும் தயாரிப்பாளர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு "அபேக்ஷாவே பிரதிமணி மாங்கல்ய மேடை நாடக விழா 2024" நடத்தப்பட்டது.

  இங்கு 44 நாடகங்கள் நடத்தப்பட்டன. 5000 ண்ணிக்கைக்கும் அதிக பார்வையாளர்கள் நாடகங்களைக் கண்டுகழிக்க வந்திருந்தனர்.

- நூர்த்தி, நாதகம், ரீட்டர் மற்றும் கிராமபோன் சகாப்தத்தின் நாடகங்களை கண்டுகழிக்க வாய்ப்பை வழங்கும் மற்றும் பிரபலமான பாடல்களை வழங்கி மகிழவைக்கும் நோக்கில், டவர் மண்டப திரையரங்கு மன்றம், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் 06 டவர் பிரபாஷ்வர இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. 8000 எண்ணிக்கைக்கும் அதிக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இந்த இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று நிகழ்ச்சிகளை ரசித்து மகிழ்ந்தனர்.

- சிங்கள மற்றும் இந்து புத்தாண்டை முன்னிட்டு மேடை நாடகத்திற்கும் நிகழ்த்து கலைத் துறைக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த கலைஞர்களுக்கான வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 122 சிரேஷ்ட கலைஞர்களுக்கு சுமார் ரூ. 10,000.00 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மேலும், 2024 ஆம் ஆண்டிற்கான வாழ்க்கை உதவித்தொகையாக ரூ. 12,810,000.00 தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்

### தூரநோக்கு

"நாடகம் அடங்கலாக நிகழ்த்து கலைகளில் தரமான கலாச்சாரத்தை உருவாக்குவதில் தெற்காசியாவில் ஒரு முன்னணி நிறுவனமாக மாறுதல்"

### செயற்பணி

நாடகம் அடங்கலாக நிகழ்த்துக் கலைகளின் மரபுகளைப் பாதுகாத்தல், ஆற்றல்மிக்கத் திறனாளிகள் அடங்கலாக இந்தத் துறையில் ஆர்வமுள்ள நபர்களை புதிய ஆற்றல்களுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் வழிநடத்துதல், உரிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் நாடகம் அடங்கலாக தரமான நிகழ்த்துக் கலைக் கலாச்சாரத்தை உருவாக்க வழிவகுத்தல்

### நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்

- தேசிய நாட்டிய செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- நாடகம் பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் பயன்பாடு என்பவற்றை வளர்த்து மேம்படுத்துதல்.
- நாடகக் கலைஞர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் நிதி உதவிகளை வழங்குதல் மற்றும் நாடகக் கலைஞர்களின் பயிற்சிக்கு உதவுதல்.
- பாடல்கள், நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் மற்றும் இசை என்பவற்றை தயாரித்தல், ஆராய்ச்சி மற்றும் நடிப்பு ஆகியவற்றில் ஈடுபடச்செய்தல் மற்றும் அது தொடர்பான கல்வியை வழங்குதல்.
- டவர் மண்டப திரையரங்கை ஒரு தேசிய நினைவுச்சின்னமாக மீட்டமைத்தல், பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் பயன்படுத்துதல், சபை பொருத்தம் எனக் கருதும் பிற நோக்கங்களுக்காக, திரையரங்கை அரசியல் கட்சி பேதமின்றி பயன்படுத்துதல்.

❖

## 1.3 முக்கிய கருமபணிகள்

07. மேடை நாடகம் அடங்கலாக நிகழ்த்து கலைகளில் ஈடுபடுபவர்களைப் பாராட்டுதல் மற்றும் அவர்களின் நலனை மேம்படுத்துதல்.

08. நாடகம், நூர்த்தி, நாடக சகாப்தத்தின் படைப்பு பொழுதுபோக்குகள் என்பவற்றை எதிர்கால சந்ததியினருக்குப் பெற்றுக்கொடுத்தல்.

09. தரமான நாடகம் மற்றும் நிகழ்த்து கலைப் படைப்புகள் என்பவற்றை உருவாக்குவதற்கு ஆற்றல்வாய்ந்த கலைஞர்களை ஊக்குவித்தல்.

10. உள்நாட்டு நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகள் ஆகியவற்றை சர்வதேச அரங்கிற்கு கொண்டுசெல்லல், உள்நாட்டு நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகள் ஆகியவற்றுக்கு சர்வதேச போக்குகளை அறிமுகப்படுத்தி அவற்றை விரிவுபடுத்துதல்.

11. டவர் மண்டப திரையரங்கு மன்றத்திற்கு சொந்தமான திரையரங்குகளையும் மற்றும் ஸ்டுடியோக்களையும் மேம்படுத்துதல் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச மக்களிடையே அவற்றை ஊக்குவித்தல்.

12. நாடகம் அடங்கலாக, தரமான நிகழ்த்து கலை கலாச்சாரத்தை உருவாக்கி அதனை ஊக்குவித்தல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு

- ටවර් හෝල් රඟහල පදනමේ සංවිධාන ව්‍යුහය -



## 1.5 திரையரங்கு மன்றத்தின் கீழ் இயங்குகின்ற முக்கிய பிரிவுகள்

1.5.1 நிருவாக மற்றும் அபிவிருத்திப் பிரிவு

1.5.2 நிதிப் பிரிவு

1.5.3 நாடக ஊக்குவிப்பு கலைஞர் நலன் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு

1.5.4 தமிழ் நாடக மேம்பாட்டுப் பிரிவு

1.5.5 கல்வி ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு பிரிவு

1.5.6 டவர் மண்டப திரையரங்கு - மருதானை

1.5.7 எல்பின்ஸ்டன் திரையரங்கு - மருதானை

1.5.8 ருக்மணி தேவி திரையரங்கு கேந்திர நிலையம் - நீர்கொழும்பு

1.5.9 ஸ்டுடியோ - கொழும்பு 07

1.5.10 நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரி (சிங்கள மொழி) - கொழும்பு

1.5.11 நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரி (தமிழ் மொழி) - யாழ்ப்பாணம்

## அத்தியாயம் 02

## முன்னேற்றமும் தூரநோக்கும்

### "அபேக்ஷாவே பிரதிமணி மாங்கல்ய கோபுர நாடக விழா 2024"

அழகியல்கலையின் மூலம் இலங்கை சமூகத்தை ஒரு புதிய உணர்வோடு கட்டியெழுப்பும் நோக்கில் 2024 ஆம் ஆண்டுக்கான கோபுர நாடக விழா வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

05 திரு சோமசிறி ஏகநாயக்க (பணிப்பாளர் திட்டமிடல் - தேசிய மரபுரிமைகள் பிரிவு)
06 பேராசிரியர் திரு அனுர விக்ரமசிங்க
07 சிரேஷ்ட பேராசிரியர் திரு சந்திரசிறி போகமுவ
08 திரு யசங்க இஷான் தயாபால




2024 ஆம் ஆண்டுக்கான அபேக்ஷா மேடை நாடக விழாவிற்கு, அகில இலங்கை கல்லூரி நாடகப் போட்டியில் 12 முழு நீள் நாடகங்கள், 24 குறும் நாடகங்கள், 04 குழந்தை நாடகங்கள் மற்றும் 04 வெற்றி பெற்ற நாடகங்கள் அடங்கலாக 44 நாடகங்கள் கண்காட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்த நாடக விழாவிற்கான முன்னோட்ட நிகழ்ச்சியாக, 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 09 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கு முன்பிருந்து நாடக ஊர்வலம் ஆரம்பமாகி, தொழில்நுட்பக் கல்லூரி சந்தி, பஞ்சிகாவத்தை சுற்றுவட்டம் வழியாக எல்பின்ஸ்டன் திரையரங்குக்கு திரும்பியது. நாடகக் கலைஞர்கள், நாடகக் கல்லூரி மாணவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் டவர் மண்டப திரையரங்கின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக சுமார் 300 பேர் இதில் கலந்து கொண்டனர்.







அபேக்ஷா மேடை அங்குரார்ப்பண டவர் மண்டப நாட்டிய விழா 2024.02.10 ஆம் திகதி முதல் 2024.02.21 ஆம் திகதி வரை மருதானை டவர் மண்டப திரையரங்கு மற்றும் எல்பின்ஸ்டன் திரையரங்கு ஆகியவற்றில் பிற்பகல் 3.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் நடத்தப்பட்டது. அதே நேரத்தில் கல்லூரி மாணவர்களின் நாடகங்கள் 2024.02.20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்கு நடத்தப்பட்டன.

இந்த நாடக விழா இலத்திரனியல் மற்றும் அச்சீட்டு ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டது. 10 நாட்களில் 5,000 எண்ணிக்கைக்கும் அதிகமான பார்வையாளர்கள் நாடகத்தைக் கண்டுகழிக்க வந்திருந்தனர்.









## கோபுர ரங்க யாத்திரை - கல்வி பொழுதுபோக்கு

தேசிய நாடகங்களை ஊக்குவிப்பதற்கும், எதிர்கால சந்ததியினரை நாடகத்திலும், நடிப்பிலும் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும், இனிமை மற்றும் திறன்கள் என்பவற்றை வளர்ப்பதற்கும், இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான கல்வி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் டவர் ரங்க யாத்திரையின் மூலம் நடத்துகின்றன.

இந்த டவர் ரங்க யாத்திரை நிகழ்ச்சித் திட்டம், தேசிய நாடகத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரை அதன் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய கல்வி பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.



சிரேஷ்ட நடிகர்களும் சிரேஷ்ட விரிவுரையாளருமான பிரசன்னஜித் அபேசூரிய, தரங்க குமாரி கருணாநாயக்க, இந்திக ஜயசிங்க, இவங்கா பீரிஸ், சமிந்த மெதகெதர, சாந்த பீரிஸ், மலித் அனுராதா, நிரோஷன் அமரசிங்க, துணைக் கலைஞர்கள் லிலித் அமரசிங்க மற்றும் உப்மரக்ஷயங்கே ரோய் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

2024 ஆம் ஆண்டில், தீவு முழுவதும் 06 பாடசாலைகளில் 06 டவர் ரங்க யாத்திரை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் காலை 10.00 மணி முதல்





மதியம் 12.00 மணி வரை இரண்டு மணி நேரத்திற்கு நேரடியாக ஒலிபரப்பப்பப்பட்டது.

- **2024.06.25 ஆம் திகதி கடவத்தை வித்யாலோக கல்லூரி**
- **2024.07.16 ஆம் திகதி சூரியவெவ தேசியப் பாடசாலை**
- **2024.07.17 ஆம் திகதி ரத்கம தேவபதிராஜ வித்தியாலயம்**
- **2024.08.05 ஆம் திகதி எம்பிலிப்பிட்டிய காவந்திஸ்ஸ மகா வித்தியாலயம்**
- **.202411.05 ஆம் திகதி கிரிஉல்ல கெமுணு மகா வித்தியாலயம்**
- **.202411.11 ஆம் திகதி பண்டாரவள புனித/யோஷப் வித்தியாலயம்**





இந்த கண்காட்சிகள் ஒவ்வொன்றிலும் நாடகம், நிகழ்த்து கலைகள் மற்றும் அழகியல் பயிலும் அந்தப் பாடசாலைகளின் மாணவர்களிடமிருந்தும், அருகிலுள்ள கல்லூரிகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களிடமிருந்தும் அதிகளவு பங்கேற்பு இருப்பது அவதானிக்கப்பட்டது.

## இலங்கையின் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்ட நாட்டியம் பற்றிய தொழில்சார் பாடநெறி - ACTOR (NVQ 4)

நாட்டிற்கு தொழில் ரீதியாக திறமையான நடிகர்களையும் மற்றும் நடிகைகளையும் உருவாக்க, டவர் மண்டப திரையரங்கு மன்றம், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி ஆணைக்குழுவின் தேசிய திறன்

நியமங்கள் என்பவற்றுக்கு இணங்க, தொழிற்கல்வி நாட்டியப் பாடநெறியை (**ACTOR - NVQ** 4) ஆரம்பித்தது.

தேசிய நாடகத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை நடிப்புத் துறைக்கு அறிவு, திறன்கள் மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றுடன் நன்கு தகுதிவாய்ந்த ஆற்றல் மிக்க நடிகர்களையும் நடிகைகளையும் உருவாக்குவதற்காக நடிப்பில் தொழிற்கல்வி பாடநெறி (**NVQ** 4) நடத்தப்படுகின்றது.

## 2024 ஆம் ஆண்டின் பாடநெறிக்கு விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்தல்

இந்தப் பாடநெறிக்கு 16 வயதுக்கு மேற்பட்ட இலங்கையை சேர்ந்த ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலரும் விண்ணப்பிக்கலாம். மேலும் நடிப்பில் ஆர்வமுள்ள இயல்பான திறமை கொண்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

நாட்டியப் பாடநெறிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்றது. மேலும் தேர்வுக் குழுவில் பிரபல நடிகர் பாலித சில்வா மற்றும் விரிவுரையாளர் உஷான் போரா ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

நேர்முகப் பரீட்சைக்கு 34 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 27 பேர் நாட்டியப் பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி, நாட்டியப் பாடநெறிக்கான படிப்புகள் 2024.03.23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.



## நாட்டியப் பாடநெறி விரிவுரையாளர்கள் குழு



- ❖ பேராசிரியர் திரு மங்கல சேனாநாயக்க
- ❖ கலாநிதி திரு செனேஸ் திஸாநாயக்க பண்டார
- ❖ விரிவுரையாளர் திரு உஷான் பெரேரா
- ❖ பிரபல நடிகர் திரு பாலித சில்வா
- ❖ விரிவுரையாளர் திருமதி சமன்லதா புஷ்பகுமாரி
- ❖ விரிவுரையாளர் திருமதி தேவாங்கனி திஸாநாயக்க

நாட்டியம் பற்றிய இந்த (**NVQ** 4) தொழிற்கல்வி பாடநெறியின் கல்வி முகாமைத்துவ குழுவில் பேராசிரியர் மங்கள சேனநாயக்க, கலாநிதி சேனேஷ் திசாநாயக்க பண்டார, பிரபல நடிகர் பாலித சில்வா மற்றும் கலாநிதி அஜித் பொல்வத்தே ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இந்தப் பயிற்சி வகுப்பு ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை டவர் மண்டப திரையரங்கு மன்றத் தலைமை அலுவலக வளாகத்தில் நடத்தப்படுகின்றது.



## டவர் ஒளிமய இசை நிகழ்ச்சி - ஆறாவது வெளியீடு

புத்தபெருமானின் 2568-வது ஆண்டு வெசாக் பண்டிகையை முன்னிட்டு அகில இலங்கை சாசனரக்ஷக சபை மற்றும் புத்த சாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட "அரச வெசாக் விழா"வுக்காக, "டவர் பிரபாஷ்வர" நூர்த்தி ஜவானிகா அடங்கலாக பௌத்த பக்தி

பாடல் இசை நிகழ்ச்சி 2024.05.24 ஆம் திகதி மாத்தளை ஸ்ரீ தர்மராஜா பிரிவெனா விஹாரையில் நடைபெற்றது.




திருமதி ரத்னசீலா பெரேரா, திருமதி காஞ்சனமாலா மஹாவிதான, திரு ரவீந்திர கோதாகொட, திரு ஜீவன் ஹந்துன்நெத்தி, திரு உதேனி சந்திரசிறி, திருமதி குமாரி பெரேரா, திருமதி பெர்னி ரோஷினி, திரு டபிள்யூ. நிமல் ஜயசிங்க, திரு ருவான் தனசூரிய, திரு சமிந்த மெதகெதர, திரு பெத்தும் தனசூரிய, திரு சுகத் மைத்திரி, திருமதி வசந்தா விஜேசிங்க, திருமதி உபேக்ஷா உடகெதர, திருமதி ஸ்ரீபாலி அமரசிங்க, திரு வில்பரட் பெரேரா அடங்கலாக பிரபல நடடிகர்களும் பாடகர்களும்  இந்த இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

ரஞ்சித் யாபா டி அல்விஸ் தலைமையிலான டவர் இசைக்குழு இன்னிசை நிகழ்ச்சியை வழங்கியது. அதே நேரத்தில் உரையை சிரேஷ்ட அறிவிப்பாளர் காமினி மெரின்னேஜ் நிகழ்த்தினார்.

மாத்தளை பிரதேசவாசிகள், பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்கலாக பெரும் திரளானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.










# டவர் ஒளிமய இசை நிகழ்ச்சி - ஏழாவது வெளியீடு

புத்தபெருமானின் 2568 ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், பிரதமர் அலுவலகம், அகில இலங்கை பௌத்த மாநாடு மற்றும் தர்ம நிறுவனம் ஆகியவை இணைந்து 2024.05.25 ஆம் திகதி இரவு 8.00 மணி முதல் மறுநாள் காலை வரை, பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள தர்ம நிறுவனத்தின் முன், கோபுர சகாப்தத்தின் நவீன வருகையான "கோபுர பிரபாஷ்வர" ஐ உள்ளடக்கிய பௌத்த பக்திப் பாடல் இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன. இந்த இசை நிகழ்ச்சியைக் கண்டுகழிப்பதற்கு பௌத்தலோக மாவத்தையில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.




ரத்னசீலா பெரேரா, காஞ்சனமாலா மஹாவிதான, சுதத் சமரசிங்க, ரவீந்திர கோதாகொட, தரங்கா குமாரி, ஜீவன் ஹந்துன்நெத்தி, உதேனி சந்திரசிறி, குமாரி பெரேரா, பெர்னி ரோஷினி, டபிள்யூ. நிமல் ஜயசிங்க, ருவன் தனசூரிய, சமிந்த மெதகெதர, பெத்தும் தனன்சூரிய, சுகத் மைத்திரி, வசந்தா விஜேசிங்க, ஸ்ரீபாலி அமரசிங்க, வில்பரட் பெரேரா அடங்கலாக பல பிரபல நடிகர்கள் மற்றும் பாடகர்கள் பலரும் இந்த வருட இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இசை நிகழ்ச்சிகளுக்கான இசையை டவர் கலைஞர் ரஞ்சித் யாபா டி அல்விஸ் தலைமையிலான டவர் இசைக்குழு வழங்கியது. உரை சிரேஷ்ட அறிவிப்பாளர் காமினி மெரின்னேஜ் அவர்களால் நிகழத்தப்பட்டது.

# டவர் ஒளிமய இசை நிகழ்ச்சி - எட்டாவது வெளியீடு

எஹெட்டுவெவ தேசியப் பாடசாலையின் அதிபர் விடுத்தி வேண்டுகோளின் பேரில், டவர் சகாப்தத்தின் நவீன வருகையான "டவர் பிரபாஷ்வர", நூர்த்தி ஜவானிகா அடங்கலாக நாடக அனுபவ நிகழ்ச்சி 2024.06.18 ஆம் திகதி மாலை 6.00 மணி முதல் எஹெட்டுவெவ பண்டாரநாயக்க தேசியப் பாடசாலை மாணவர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் ஆகியோருக்காக நடைபெற்றது. இந்த நிகழ்வு மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் அடங்கலாக 2000 எண்ணிக்கைக்கும் அதிகமான பார்வையாளர்களினது வரவேற்புக்கு மத்தியில் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது.





டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் முக்கிய நோக்கங்களை அடைவதற்காக தயாரிக்கப்பட்ட இந்த இசை நிகழ்ச்சி, டவர் சகாப்தத்தில் நிர்மாணம் பெற்ற கலைப் படைப்புகளை இன்றைய தலைமுறைக்கு விட்டுச்செல்வது, ரசணை, அழகியல் பாடங்கள் மற்றும் சிங்கள பாடங்கள் ஆகிய பாடங்களை கற்கும் பாடசாலை மாணவர்களுக்கும், அந்தப் பாடங்களைக் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சம அளவில் முக்கியமானதாகும். எனவே பார்வையாளர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட ஒரு இசை நிகழ்ச்சியும் இதுவேயாகும்.

சாத்திரபதி சுகத் சமரசிங்க, டப்ளியு. நிமல் ஜயசிங்க, ருவன் தனன்சூரிய, ரத்னசீலா பெரேரா, காஞ்சனமாலா மகாவிதான, இவங்கா பீரிஸ், தரங்கா குமாரி, ஜீவன் ஹந்துன்னெத்தி, உதேனி சந்திரசிறி, குமாரி பெரேரா, பர்னி ரோஷினி, சமிந்த மெதகெதர, பெத்தும் தனன்சூரிய, சுகத் மைத்திரி, வில்பரட் பெரேரா ஆகியோர் அடங்கலாக பிரபல நடடிகர்களும் பாடகர்களும் இந்த வருட இசை நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த இசை நிகழ்ச்சிகளுக்கான இசையை ரஞ்சித் யாபா டி அல்விஸ் தலைமையிலான டவர் இசைக்குழு வழங்கியது. உரை பிரபல அறிவிப்பாளர் காமினி மெரின்னேஜ் அவர்களின் மூலம் நிகழ்த்தப்பட்டது.





## டவர் ஒளிமய இசை நிகழ்ச்சி - ஒன்பதாவது வெளியீடு

அரலகங்வில விளயாய தேசியப் பாடசாலையின் அதிபர் விடுத்த வேண்டுகோளின் பேரில், டவர் சகாப்தத்தின் நவீன வருகையான “டவர் பிரபாஷ்வர” அடங்கலாக நாடக அனுபவ நிகழ்ச்சி 2024.08.14 ஆம் திகதி அரலகங்வில மகாவலி பிரதிபா மண்டபத்தில் அரலகங்வில விளயாய தேசியப் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரலகங்வில பகுதியில் உள்ள பிற பாடசாலைகளின் மாணவர்கள், அவர்களது பெற்றோர் மற்றும் உள்ளூர்வாசிகள் ஆகியோருக்காக நடைபெற்றது.






இந்த ஆண்டு இசை நிகழ்ச்சி, டவர் நாடகம் மற்றும் நாட்டியக் கல்லூரியில் இருந்து நாடகம் மற்றும் நாடகத்தில் உயர் டிப்ளோமா பெற்ற மற்றும் ஏற்கனவே இந்தத் துறையில் தீவிரமாக ஈடுபட்டுள்ள பிரபல பாடகர்கள் மற்றும் நடிகர்கள் ஆகியோர் பங்குபற்றியதால் சிறப்பிக்கப்பட்டது.

இசையை டவர் யூத் ஆர்கெஸ்ட்ரா வழங்கியது. மேலும் உரை சிரேஷ்ட பாடகரும் நடிகருமான யோஹான் ரணசிங்க அவர்களினால் நிகழ்த்தப்பட்டது.

விளயாய தேசியப் பாடசாலையின் மாணவர்கள், அதிபர், சுற்றியுள்ள பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர், ஊழியர்கள், பெற்றோர்கள், பிரதேசவாசிகள், இலங்கை மகாவலி அதிகாரசபையின் விஜயபாபுர வலய கோட்ட முகாமையாளர், ரம்புக்கன் ஓயா வலய உதவி வதிவிட முகாமையாளர் மற்றும் மகா சங்கத்தினர் அடங்கலாக 1000 எண்ணிக்கைக்கும் அதிகமானோர் இந்த வருட இசை நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.







## டவர் ஒளிமய இசை நிகழ்ச்சி - பத்தாவது வெளியீடு

மாத்தளை ஸ்ரீ புண்யவர்தன சங்கம் விடுத்த வேண்டுகோளின் பேரில், டவர் மண்டப திரையரங்கு மண்டபம் தயாரித்த டவர் சகாப்தத்தின் நவீன வருகையான "டவர் பிரபாஷ்வரா", நூர்த்தி ஜவானிகா அடங்கலாக நாடக அனுபவ நிகழ்ச்சி 2024.09.12 ஆம் திகதி மாலை 6.00 மணி முதல் மாத்தளை சுற்றுலா ஹோட்டல் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாத்தளை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வசிக்கின்ற 1500 எண்ணிக்கைக்கும் அதிகமானோர் கலந்து சிறப்பித்தனர்.

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் முக்கிய நோக்கங்களை அடைவதற்காக தயாரிக்கப்பட்ட இந்த இசை நிகழ்ச்சி, டவர் சகாப்தத்தில் நிர்மாணம் பெற்ற கலைப் படைப்புகளை இன்றைய தலைமுறைக்கு விட்டுச்செல்வது, ரசணை, அழகியல் பாடங்கள் மற்றும் சிங்கள பாடங்கள் ஆகிய பாடங்களை கற்கும் பாடசாலை மாணவர்களுக்கும், அந்தப் பாடங்களைக் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சம அளவில் முக்கியமானதாகும். எனவே பார்வையாளர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட ஒரு இசை நிகழ்ச்சியும் இதுவேயாகும்.

சாத்திரபதி சுகத் சமரசிங்க, டப்ளியு. நிமல் ஜயசிங்க, ருவன் தனன்சூரிய, ரத்னசீலா பெரேரா, காஞ்சனமாலா மகாவிதான, இவங்கா பீரிஸ், தரங்கா குமாரி, ஜீவன் ஹந்துன்னெத்தி, உதேனி சந்திரசிறி, குமாரி பெரேரா, பர்னி ரோஷினி, சமிந்த மெதகெதர, பெத்தும் தனன்சூரிய, சுகத் மைத்திரி, வில்பரட் பெரேரா ஆகியோர் அடங்கலாக பிரபல நடடிகர்களும் பாடகர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த இசை நிகழ்ச்சிகளுக்கான இசையை ரஞ்சித் யாபா டி அல்விஸ் தலைமையிலான டவர் இசைக்குழு வழங்கியது. உரை பிரபல அறிவிப்பாளர் காமினி மெரின்னேஜ் அவர்களின் மூலம் நிகழ்த்தப்பட்டது.

## டவர் ஒளிமய இசை நிகழ்ச்சி - பதினோராவது வெளியீடு

இலங்கை மகாவலி அதிகாரசபையின் ரம்புக்கன் ஓயா வலயத்துடன் இணைந்து, டவர் மண்டப திரையரங்கு மன்றம், ரிதீமாலியத்த பிரிவிலுள்ள 234 பெண்கள் சிறு குழுக்களைச் சேர்ந்த 2564 உறுப்பினர்களுக்கு, டவர் சகாப்தத்தின் நவீன வருகையான "டவர் பிரபாஷ்வர" அடங்கலாக ஒரு நிகழ்ச்சியை 2024.11.06 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு ரிதீமாலியத்த கலாச்சார நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

டவர் யுகத்தில் நடத்திய நூர்த்தி, நாடகம், டீட்டர் மற்றும் கிராமபோன் பாடல்கள் என்பவற்றை உள்ளடக்கி மேடை நிகழ்ச்சியாக வடிவமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி, நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகள் பற்றிய அறிவையும் மற்றும் புரிதலையும் வழங்குவதற்கும், பார்வையாளர்களுக்கு பொழுதுபோக்கு வசதியை வழங்குவதற்கும் பிரத்தியேகமானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், டவர் நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரி நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமாவை நிறைவு செய்த இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்துகொண்டர்.

இந்த இசையை டவர் இசைக்குழு வழங்கியது. மேலும் உரை சிரேஷ்ட பாடகரும் நடிகருமான யோஹான் ரணசிங்க அவர்களினால் நிகழ்த்தப்பட்டது.

## பாடசாலை மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் ஒரு பயிற்சி

நாடகம் மற்றும் நாட்டியம், இலங்கையில் நாடகம் மற்றும் நாட்டியம் ஆகியவற்றின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சி, ஒரு புதிய நாடகத்தின் தோற்றம், நாட்டுப்புற கவிதை, நாட்டுப்புற பாடல் போன்றவற்றைப் பயிலும் பகமுனா மகாசென் மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கு நாடக உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு பயிற்சி வேலையரங்கு 2024.11.20 ஆம் திகதி காலை 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை நடைபெற்றது.







## டவர் ஒளிமய இசை நிகழ்ச்சி - பன்னிரெண்டாவது வெளியீடு

இலங்கை மகாவலி அதிகாரசபையின் மொரகஹகந்த வலயத்துடன் இணைந்து, டவர் மண்டப திரையரங்கு மன்றம் 2024.11.20 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு பக்கமுன மகாசென் மகா வித்தியாலயத்தில், டவர் சகாப்தத்தின் நவீன வருகையான "டவர் பிரபாஷ்வர" அடங்கலாக பக்கமுன மகாசென் மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கான ஒரு நிகழ்ச்சி அனுபவத்தை ஏற்பாடு செய்து வழங்கியிருந்தது.

டவர் யுகத்தில் நடத்திய நூர்த்தி, நாடகம், டீட்டர் மற்றும் கிராமபோன் பாடல்கள் என்பவற்றை உள்ளடக்கி மேடை நிகழ்ச்சியாக வடிவமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி, நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகள் பற்றிய அறிவையும் மற்றும் புரிதலையும் வழங்குவதற்கும், பார்வையாளர்களுக்கு பொழுதுபோக்கு வசதியை வழங்குவதற்கும் பிரத்தியேகமானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக, அன்று காலை 10.00 மணி முதல் நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் புதிய நாடகம், அதனுடன் தொடர்புடைய நாட்டுப்புற கவிதை மற்றும் நாட்டுப்புற பாடல்கள் என்பன தொடர்பான ஒரு வேலையரங்கும் மற்றும் நாடகம் மற்றும் நாட்டியம் பயிலும் மாணவர்களுக்கான இசையமைப்பு மற்றும் மேடை விளக்குகள் தொடர்பான ஒரு செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடைபெற்றன.

டவர் நாடகம் மற்றும் நாட்டியக் கல்லூரியில் நாடகமும் நாட்டியமும் பற்றிய உயர் டிப்ளோமாவை நிறைவு செய்த இளைஞர்கள் இதற்கான வளங்களை வழங்கினார்கள். மேலும் டவர் பிரபாஷ்வரா இசை நிகழ்ச்சியை வடிவமைப்பதில் அவர்களின் பங்களிப்பும் ஒரு சிறப்பம்சமாகும்.

இசையை டவர் இசைக்குழு வழங்கியது. உரை சிரேஷ்ட பாடகரும் நடிகருமான யோஹான் ரணசிங்க அவர்களால் நிகழ்த்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்காக டவர் மண்டப திரையரங்கு மன்றம் 600,000 ரூபாவுக்கும் அதிகமான நிதியை செலவிட்டது.

ஹிங்குராங்கொட வலயக் கல்விப் பணிப்பாளர் திரு டபிள்யூ.எம்.எல்.சி.கே. வாசலமுதலி, பகமுன மஹாசென் மகா வித்தியாலய அதிபர் திரு உபாலி வத்தேகெதர, டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி) நிபுன திஸாநாயக்க, பிரதிப் பணிப்பாளர் (நாடக ஊக்குவிப்பு, கலைஞர் நலன் மற்றும் நிகழ்ச்சிகள்) சந்தன விஜேசுந்தர பண்டார, இலங்கை மகாவலி அதிகாரசபை மொரகஹகந்த வலயத்தின் வதிவிட வர்த்தக முகாமையாளர் (அபிவிருத்தி) ஆர்.எம். ரந்தெனிய, பிரதி வதிவிட முகாமையாளர் (அபிவிருத்தி) எஸ்.ஏ.ஆர்ஷ உதயங்கனி மற்றும் பகமுன மஹாசென் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்கள் குழாம் மற்றும் மாணவ மாணவிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.







## சிங்கள மற்றும் இந்து புத்தாண்டை முன்னிட்டு கலைஞர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகளை நன்கொடையாக வழங்குதல்

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தினால் செயற்படுத்தப்படும் வயதான கலைஞர்களுக்கான மாதாந்த வாழ்க்கை உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்ட வயதான கலைஞர்களுக்கு, சிங்கள புத்தாண்டை அவர்களது குடும்பங்களுடன் கொண்டாடுவதற்காக, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அண்ணளவாக 10,000/- ரூபா பெறுமதியான உலர் உணவுகள் அடங்கிய பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதற்கான உலர் உணவுப் பொருட்கள் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கிடைத்தன. மேலும் 122 கலைஞர்களுக்கு பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.



புத்தாண்டை முன்னிட்டு பரிசுகளை வழங்கும் வைப விழா 2024.04.08 ஆம் திகதி அலரி மாளிகையில் கௌரவ பிரதமரின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலாச்சார அலுவல்கள் அமைச்சர், அந்த அமைச்சின் செயலாளர், பிரதமரின் செயலாளர் மற்றும் சிரேஷ்ட கலைஞர்கள் மற்றும் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் வயதான கலைஞர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் டவர் மண்டப நாடக மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

 

## சிங்கள மொழி நாடக மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரி

இந்தப் பாடநெறி இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. மேலும் இரண்டு வருட முழுநேர நாடகம் மற்றும் நிகழ்த்து கலை உயர் டிப்ளோமா (SLQF) 3 மற்றும் (SLQF) 4 ஆகிய பாடநெறிகளைப் பயிலும் மாணவர்கள், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி பீடத்தின் இடைநிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வி பிரிவால் நடத்தப்படும் இளங்கலை (நாடகம் மற்றும் நிகழ்த்து கலை) பட்டப்படிப்பின் இறுதி இரண்டு ஆண்டுகளுக்காக அதாவது (SLQF) 5, (SLQF) 6 நிலைகளுக்கு சிபாரிசு செய்யப்படுகின்றார்கள்.

**இந்தப் பாடநெறிக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள்**:-

(அ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் கலை மற்றும் சிங்களம் ஆகிய பாடங்களில் 03 திறமை சித்திகளுடனும் மற்றும் கணிதப் பாடத்தில் சதாரண சத்தியுடனும் 06 பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும் (இந்த தகைமைகள் சான்றிதழ்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).

(ஆ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஏதாவதொரு பிரிவில் சித்தி அடைந்திருத்தல்.

(இ) இந்த பாடநெறிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது, க.பொ.த (உ/த) பாடத்திற்கு நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளை ஒரு பாடமாகக் கற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ஈ) 18 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விரிவுரைகளும் செயன்முறை சார்ந்த செயற்பாடுகளும்**

2024 ஆம் ஆண்டில், நாட்டியக் கல்லூரி மாணவர்களுக்கு அதாவது 2021/22 மற்றும் 2022/23 கல்வியாண்டுகளுக்கான கல்வி சார்ந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

| கல்வி ஆண் டு | மாணவர்களி ன் எண்ணிக்கை | விரிவுரை மணித்தியாலங்களி ன் எண்ணிக்கை | செயன்முறை ரீதியான செயற்பாடுகளின் மணித்தியாலங்க ள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2021/22 | மாணவர்கள் 47 | 585 | 375 |
| 2022/23 - | மாணவர்கள் 65 | 585 | 375 |

**2024 ஆம் ஆண்டிற்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளல்**

- 2024/25 கல்வியாண்டிற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை பற்றிய அறிவித்தல் செய்திதாள்களிலும், டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் இணையத்தளத்திலும், சமூக ஊடகங்களிலும் வெளியிடப்பட்டது.

- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 05 ஆம் திகதியாகும். மேலும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த 120 விண்ணப்பதாரர்கள் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்த எழுத்துமூலப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இரண்டு வினாத்தாள்களிலும் 40 புள்ளிகளுக்கு அதிகமான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கும் செயன்முறை நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்பட்டனர். அவர்களில் அதிக புள்ளிகளைப் பெற்ற 67 மாணவர்கள் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக் குழுவில் களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பிரியங்கர ரத்நாயக்க, சிரேஷ்ட நாடக ஆசிரியர் பாலித சில்வா, தேவாங்கனி ரங்கனா மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பிரசாத் வீரசிங்க ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

## உலக நாடக தினம் கொண்டாட்டம் 2024

❖ சர்வதேச நாடக நிறுவகத்தால் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உலக நாடக தினத்தை முன்னிட்டு, டவர் மண்டப திரையரங்கு மன்றம், அதன் இலங்கை பிரதிநிதி என்ற வகையில், 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கு மண்டபத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான உலக நாடக தினத்தை






கொண்டாடியது. இந்த நிகழ்வின் போது, 2021/22 மற்றும் 2022/23 கல்வி ஆண்டுகளுக்கான சிங்கள மொழி நாடகக் கல்லூரி மாணவர்களின் முழு பங்கேற்புடன் தயாரிக்கப்பட்டிருந்த நான்கு குழந்தை சிறு நாடகங்கள் (சிஹியன் லந்தெரும, மாயா பின்சலா, கீதாரம், Lilly's Majic World) அரங்கேற்றப்பட்டன. மேலும், உலக நாடக தின செய்தி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் வாசிக்கப்பட்டது. விருந்தினர் சொற்பொழிவை அரச நாடக ஆலோசனைக் குழுவின் தலைவரும், களனி பல்கலைக்கழகத்தின் நாடகம் மற்றும் நிகழ்த்து கலைப் பிரிவின் முன்னாள் தலைவருமான திரு சந்திரசிறி போகமுவ நிகழ்த்தினார்.

புத்தசாசன, கலாச்சார, மத அலுவல்கள் அமைச்சர் கௌரவ திரு விதுர விக்ரமநாயக்க, அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள் மற்றும் அழைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பெருமளவில் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





## 2024/25 கல்வி ஆண்டிற்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் வைபவ விழா

- 2024/25 கல்வியாண்டிற்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான ஆரம்ப வைபவ விழா 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி சவ்சிரிபாய கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் புதிய மாணவர்கள், தற்போதைய மாணவர்கள் மற்றும் நாட்டியக் கல்லூரியின் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் டவர் மண்டப நாடக மன்றப் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான ஊழியர்கள் அடங்கலாக 250 எண்ணிக்கைக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். எழுத்துமூல மற்றும் செயன்முறை பரீட்சைகளில் சித்தி அடைந்த 67 மாணவர்கள் 2024/25 கல்வியாண்டிற்கு நாடகம் மற்றும் நிகழ்த்துக் கலைக் கல்லூரியில் உத்தியோகபூர்வமாக சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

## புதிய மாணவர்களுக்கான புதிய அறிமுக வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம்

- நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பாடநெறிக்புகு சேர்ந்த மாணவர்களுக்கு டவர் மண்டப திரையரங்கு மன்றம் மற்றும் பாடநெறி ஆகியன பற்றிய விரிவான புரிதலை வழங்குதல், வெளிப்புற சூழல் மற்றும் மாணவர் பாதுகாப்பு பற்றி அவர்களுக்கு போதித்தல், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு பற்றிய புரிதலை வழங்குதல் மற்றும் நாடகம் மற்றும் நிகழ்த்துக் கலைகள் மற்றும் அதன் புதிய போக்குகள் என்பன பற்றி அவர்களுக்கு போதித்தல் முதலிய அம்சங்களின் அடிப்படையில், புதிய மாணவர்களுக்கான வழிகாட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 2024 ஆகஸ்ட் மாதம் 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன. அதன் பின்னர், முதல் கல்வியாண்டின் முதல் கல்வித் தவணை ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

- இந்த வழிகாட்டுதல் நிகழ்ச்சித் திட்டத்தில் சிரேஷ்ட கலைஞர் பாலித சில்வா அவர்களின் செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் இடம்பெற்றது. திறந்த பல்கலைக்கழகத்தின் நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் கல்வி பட்டப்படிப்பு திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி அயோமி இருகல் பண்டார, சிரேஷ்ட நாடக ஆசிரியர் சாமிகா ஹட்லஹவத்த மற்றும் டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.எம்.எஸ். திசாநாயக்க ஆகியோர் மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு தேவையான அறிவையும் புரிதலையும் வழங்கினர்.

## விரிவுரைகளையும் மற்றும் பரீட்சைகளையும் நடத்துதல்

கல்வி ஆண்டு 2021/22 - 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை விரிவுரைகள் நடத்தப்பட்டன.

எழுத்துமூலப் பரீட்சை விவகாரங்கள்:-

- 2021/22 ஆண்டின் இரண்டாம் கல்வியாண்டின் முதல் அரையாண்டிற்கான எழுத்துமூலப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 05 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. இந்த எழுத்துமூலப் பரீட்சை நாரஹேன்பிட்டியில் உள்ள பராக்கிரமபாகு கல்லூரியில் நடைபெற்றது. 57 மாணவர்கள் அந்தப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

- இரண்டாம் கல்வியாண்டின் இரண்டாம் அரையாண்டு எழுத்துமூலப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03,05 06 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது.

செயன்முறைப் பரீட்சை (பரீட்சை விவகாரங்கள்) :-

- இந்த கல்வியாண்டின் இரண்டாம் கல்வியாண்டு மாணவர்களுக்கான முதல் தவணை செயன்முறைப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ஆம் திகதி எல்பின்ஸ்டன் திரையரங்கு மண்பத்திலும், இரண்டாம் தவணை செயன்முறைப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் டவர் திரையரங்கு மணடபத்தில் நடத்தப்பட்டன.



- முதல் தவணை செயன்முறைப் பரீட்சை தொடர்பாக, இந்த கல்வியாண்டின் மாணவர்கள் நான்கு குழந்தை நாடகங்களைத் தயாரித்து எல்பின்ஸ்டன் திரையரங்கு மண்டபத்தில் அரங்கேற்றினர்.



- இரண்டாம் தவணை இறுதி செயன்முறைப் பரீட்சைக்காக மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 08 நாடகங்கள் இயக்கப்பட்டு டவர் திரையரங்கு மண்பத்தில் அரங்கேற்றப்பட்டன. சாமிக ஹத்லஹவத்த, லஹிரு மெதிவில மற்றும் பிரதீப் சந்திரசிறி ஆகியோர் இரண்டாம் கல்வியாண்டின் முதல் தவணை செயன்முறைப் பரீட்சைக்கு பங்களித்தனர்.

❖ இரண்டாம் கல்வியாண்டின் இரண்டாம் அரையாண்டு இறுதி செயன்முறைப் பரீட்சையில், மாணவர்கள் நாடக இயக்கம், தயாரிப்பு,





ஒளியமைப்பு, நாடக இசை, மேடை நிருவாகம் போன்றவற்றில் பெற்ற அறிவை பரீட்சைக் குழுவின் முன்னிலையில் வெளிக்காட்டினர். பரீட்சைக் குழுவில் ரஜித திசாநாயக்க, பி. பிரதீப் சந்திரசிறி மற்றும் எல்.எம். மெதிவில ஆகியோர் பங்கேற்றனர்.

கல்வி ஆண்டு 2022/23 - 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் வரை விரிவுரைகள் நடத்தப்பட்டன.

❖ 2022/23 கல்வியாண்டின் முதல் கல்வியாண்டின் இரண்டாவது அரையாண்டு எழுத்துமூலப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25,26,27,28 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. 2022/23 கல்வியாண்டின் முதல் கல்வியாண்டின் இரண்டாவது அரையாண்டு செயன்முறைப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23,24,25 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. நடைமுறைப் பரீட்சைக் குழுவின் உறுப்பினர்களாக திரு. பாலித பெரேரா, திரு தரங்கா குமாரி மற்றும் திரு தேவிந்த விக்ரமசிங்க ஆகியோர் பங்கேற்றனர்.





2024/25 கல்வியாண்டின் முதல் அரையாண்டு விரிவுரைகள் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் திசம்பர் இறுதி வரை நடத்தப்பட்டன.

## 2021/22 கல்வி ஆண்டு மாணவர்களின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம்

2021/22 கல்வியாண்டிற்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவ விழா (10-வது) 2024 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 15 ஆம் திகதி சவ்சிரிபாய கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த 52 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன (இதில் 2020/21 கல்வியாண்டில் மீண்டும் தோற்றிய 09 மாணவர்களும் அடங்குகின்றார்கள்)

❖ விழாவில் முக்கிய உரையை கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடக பீடத்தின் பேராசிரியர் டியூடர் வீரசிங்க நிகழ்த்தினார்.





❖ 2021/22 கல்வியாண்டில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்திய நான்கு மாணவர்களுக்கு பதக்கங்களும் மற்றும் புலமைப்பரிசில் தொகைகளும் வழங்கப்பட்டன. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி இளங்கலைப் பட்டத்தை பெறுவதற்காக அவர்களுக்கு தலா 50,000/- ரூபா புலமைப்பரிசில் தொகையும் வழங்கப்பட்டது. மிகச்சிறந்த மாணவருக்கு உரித்தான டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் உயர் புலமைப்பரிசில் தொகையான 55,000/- ரூபா ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.





புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, அவர்கள், அமைச்சின் செயலாளர் திரு ஏ.எம்.பி.எம். அதபத்து, மேலதிக செயலாளர் (நிர்வாகம்) திருமதி எஸ்.ஜி. பள்ளியகுருகே, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி பீடத்தின் பீடாதிபதி கலாநிதி டி.வி.எம். டி சில்வா அவர்கள், பிரிவுத் தலைவர் பேராசிரியர் எஃப்.எம். நவாஸ்தீன், திறந்த



பல்கலைக்கழகத்தின் நாடகம் மற்றும் நிகழ்த்து கலை பட்டங்களின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி அயோமி இருகல்பண்டார அவர்கள், டிப்ளோமா சான்றிதழ்களை பெற்றவர்களின் பெற்றோர்கள், நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரியின் கல்வி முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், டவர் மண்டப திரையரங்கு மன்ற ஊழியர்கள் மற்றும் நாட்டியக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் குழு ஆகியோர் அடங்கலாக 200 பேர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.



## தமிழ் மொழி நாட்டியம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரி

4. தமிழ் மொழி நாட்டியக் கல்லூரி
5. தமிழ் மொழி கலர்சசார நிகழ்ச்சித் திட்டம்
6. தமிழ் மொழி நாட்டிய ஊக்குவிப்பு

**தமிழ் மொழி நாட்டியக் கல்லூரி:-**

யாழ்ப்பாண தமிழ் மொழி நாடகம் மற்றும் நிகழ்த்துக் கலைக் கல்லூரியில் 2024/2025 ஆம் ஆண்டிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளல்

உரிய நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, தகைமைகளைப் பூர்த்தி செய்த 45 மாணவர்கள் அதன்படி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இந்த மாணவர்களின் ஆட்சேர்ப்பு வைபவ விழா 2024.09.03 ஆம் திகதி சங்கானை கலாச்சார நிலையத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் வட மாகாண சபையின் உதவிப் பிரதம செயலாளர் பேராசிரியர் அருணாச்சலம் சத்ததாஸ், யாழ்ப்பாண திறந்த பல்கலைக்கழகத்தின் திரு கே. கந்தவேல், டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தமிழ் நாடகப் பிரிவின் உதவி பணிப்பாளர் ஆகியோர் அடங்கலாக பலர் கலந்து கொண்டனர்.







புதிய மாணவர்களுக்கு ஆரம்ப வழிகாட்டல்

2024/2025 கல்வியாண்டில் சேரும் மாணவர்களுக்கு பாடத்திட்டங்கள் பற்றிய புரிந்துணர்வை வழங்குதல், டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் வகிபங்கு பற்றி அறிமுகப்படுத்துதல், திறந்த பல்கலைக்கழகத்தின் வகிபங்கு பற்றி அறிமுகப்படுத்துதல் மற்றும் மாணவ மாணவிகளின் அறிவு, அணுகுமுறைகள் மற்றும் திறன்கள் என்பவற்றை வளர்க்கும் நோக்கில் ஒரு வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

தமிழ் மொழி நாட்டியக் கல்லூரியின் முதல் மாணவர் குழுவினால் தயாரிக்கப்பட்டவொரு நாடகம்

2022/2023 கல்வியாண்டில் மாணவர்களின் படிப்பு நிறைவடைந்ததும், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஒரு நாடகம் தயாரிக்கப்பட்டது. "கிங்லியார்" நாடகம் இலங்கையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் நாடகமாகும். இந்த நாடகத்தின் முழு தயாரிப்பு உரிமையும் டவர் மண்டப திரையரங்கு மன்றத்திற்கு சொந்தமானது. இதன் முதல் காட்சி 2024.07. 23 ஆம் திகதி சண்டிலிப்பாய் கலாச்சார நிலையத்தில் நடைபெற்றது. அன்றைய

முதல் நிகழ்ச்சியில் 300 எண்ணிக்கைக்கும் அதிகமான உள்ளூர்வாசிகள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மொழி நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரியின் முதல் தொகுதி மாணவர்களுக்கு நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமா பட்டங்களை வழங்குதல்

2022/2023 கல்வியாண்டில் படிப்பை நிறைவு செய்த 44 மாணவர்களுக்கு 2024.12.28 ஆம் திகதி நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமா பட்டங்கள் வழங்கப்பட்டன. இந்த விழாவில், கௌரவ புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் அவர்களின் அழைப்பின் பேரில், கடற்றொழில், நீர் உயிரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரம் மற்றும் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டனர். வட மாகாண பிரதம செயலாளர், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், டவர் மண்டபதிரையரங்கு மன்றத்தின் பணிப்பாளர் நாயகம், அரச அதிகாரிகள், மாகாண சபை அதிகாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டங்களைப் பெற்றவர்களின் பெற்றோர்கள் அடங்கலாக ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



05 கல்விப் புலமைப்பரிசில்களை வழங்குதல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி இளங்கலைப் பட்டத்தைப் பெறுவதற்காக 2022/2023 கல்வியாண்டில் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்திய 04 மாணவர்களுக்கு தலா ரூ.50,000 பெறுமதியான பதக்கங்களும் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.



04. மாணவி இ. ஜென்ஷனா - பேராசிரியர் எஸ்.வித்யானந்தன் நினைவுப் பதக்கம்
05. மாணவி என். நிலக்ஷனா - நாட்டியமயில் கலாபூஷன் நாகமணிப்பொடி அண்ணாவியார் நினைவுப் பதக்கம்

06. மாணவி எஸ். சங்கீதா - மேரி சேவியர் அடிகளார் நினைவுப் பதக்கம்.



இரண்டாம் ஆண்டு கல்வியில் அனைத்து பாடங்களிலும் அதிக புள்ளிகளைப் பெற்ற டயானா ஜெயக்கொடி என்ற மாணவிக்கு, நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமா பாடத்தில் மிக முக்கியமான விருதான மன்றத்தின் பதக்கமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி இளங்கலைப் பட்டத்தைப் பின்பற்றுவதற்கு 55,000.00 ரூபா புலமைப்பரிசில் உதவித்தொகையும் வழங்கப்பட்டது.

## தமிழ் கலாச்சார நிகழ்ச்சித்திட்டம்:-



<u>தைப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுதல்</u>

புத்தாண்டு விவகாரங்களை தொடங்குவதற்கு முன்னர் ஆசிர்வாதம் பெறும் நோக்கத்துடன், தமிழ் நாட்டியக் கல்லூரி மாணவர்கள் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி தைப் பொங்கல் பண்டிகை விழாவைக் கொண்டாடினர்.



<u>ராவணேசன் குத்து மற்றும் காத்தவராயன் குத்து ஆகிய இரண்டு நாடகங்களின் அரங்கேற்றம்</u>

நல்லூர் கோவிலின் வருடாந்த விழாவைக் கொண்டாடும் வகையில், டவர் நாடகக் கல்லூரி தயாரித்த ராவணேசன் மற்றும் காத்தவராயன் குத்து ஆகிய இரண்டு நாடகங்கள் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அரங்கேற்றப்பட்டன.

**<u>சரஸ்வதி பூஜையை நிகழ்த்துதல்</u>**

சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கலாச்சார நிலையத்தில் தமிழ் மொழி நாடகக் கல்லூரியின் மாணவர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் ஆகியோரின் பங்கேற்புடன், சரஸ்வதி பூஜை 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்றது.

## தமிழ் நாடகங்கள் ஊக்குவிப்பு:-

யாழ்ப்பாணப் பகுதி பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

தமிழ் மொழி நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரி மாணவர்களை ஈர்ப்பதையும், நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு, இந்தப் பயிற்சி வேலையரங்கு 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் இந்தப் பயிற்சி வேலையரங்கு தொடர்ந்து வட மாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது.



**பாத்கண்டப் பரீட்சையை நடத்துதல்**

2024 பாத்கண்டப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஜூலை மாதத்தில் கோரப்பட்டன. 150 எண்ணிக்கைக்கும் அதிகமான மாணவர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.





பாத்கண்ட எழுத்துமூலப் பரீட்சைகள் திசம்பர் மாதம் 28 ஆம் மற்றும் 29 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டு, செயன்முறைப் பரீட்சைகளும் நிறைவடைந்தன.

நடனம் மற்றும் இசை உயர் டிப்ளோமா பாடநெறிக்கான பாடத்திட்டத்தைத் தயாரித்தல்

தமிழ் நாடக மேம்பாட்டுப் பிரிவால் நடத்தப்பட்ட மேற்குறித்த டிப்ளோமா பாடநெறிகளுக்கான பாடத்திட்டத்தை தயாரிக்கும் பணி 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் 2024 வரையான காலப்பகுதியில் நிறைவடைந்தது. இவ்வாறு நிறைவுசெய்யப்பட்ட இசை மற்றும் நடனப் பாடநெறிகளுக்கான பாடத்திட்டம் அங்கீகாரத்திற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**சவால்கள்**

- டவர் மண்டப திரையரங்கு மன்றம், டவர் மற்றும் எல்பின்ஸ்டோன் ஆகிய திரையரங்குகளை சொந்தமாகக் கொண்டுள்ளது. இவை 100 ஆண்டுகளுக்கும் அதிக காலம் பழமையானவை. இவற்றை பராமரிக்கவும் இயக்கவும் அதிக அளவு பணம் தேவைப்படுதல்.
- டவர், எல்பின்ஸ்டன் மற்றும் ருக்மணி தேவி ஆகிய திரையரங்குகளுக்கு 40 ஆண்டுகளாக இலவச மின்சாரம் வழங்கப்பட்டமை 2023 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டதால், 2024 ஆம் ஆண்டில் மின்சாரத்திற்காக மட்டும் 20.16 மில்லியன் ரூபா தொகையை செலவிடுவதற்கு நேர்ந்தமை.
- ஊழியர்களின் சம்பளத்தில் அரைவாசியை திறைசேரி குறைத்ததால், 2024 ஆம் ஆண்டில் மட்டும் ஊழியர்களின் சம்பளத்திற்கு 14.05 மில்லியன் ரூபாவை செலவிடுவதற்கு நேர்ந்தமை.
- தற்போதைய பொருளாதார பிரச்சனைகளால், தயாரிப்பாளர்கள் கலைசார் செயற்பாடுகளில் தமது முதலீட்டைக் குறைத்து வருகின்றமை.

**எதிர்கால இலக்குகள்**

- மேடை நாடகம் அடங்கலாக நிகழ்த்து கலைகளில் ஈடுபடுபவர்களைப் பாராட்டுதல் மற்றும் அவர்களின் நலனை மேம்படுத்துதல்.
- நாடகம், நூர்த்தி, நாடக சகாப்தத்தின் படைப்பு, பொழுதுபோக்குகள் என்பவற்றை எதிர்கால சந்ததியினருக்குக் கிடைக்கச்செய்தல்.
- தரமான நாடகம் மற்றும் நிகழ்த்து கலைப் படைப்புகளை நிர்மாணிப்பதற்கு படைப்பாற்றல் கலைஞர்களை ஊக்குவித்தல்.
- தேசிய நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச்செல்லல், தேசிய நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளுக்கு சர்வதேச போக்குகளை அறிமுகப்படுத்தி விரிவுபடுத்துதல்.
- டவர் மண்டப திரையரங்கு மன்றத்திற்குரிய திரையரங்குகள் மற்றும் ஸ்டுடியோக்கள் என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மக்களிடையே அவற்றை ஊக்குவித்தல்.
- நாடகம் அடங்கலாக, தரமான நிகழ்த்து கலை கலாச்சாரத்தை உருவாக்கி ஊக்குவித்தல்.
- மேற்கூறிய அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளத் தேவையான நிதியை ஈட்டும் உன்னத உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

கலாநிதி டீ.எம்.எஸ். திஸாநாயக்க, பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப திரையரங்கு மன்றம்

# அத்தியாயம் 03
# ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயல்திறன்

3.1 நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று

2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முழுமையான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| **கூட்டப்பட்டது:** | | | |
| அரசாங்கம் வழங்கிய மானியங்கள் - மீண்டெழும் செலவினம் | | 43,900,000 | 59,090,000 |
| அரசாங்கம் வழங்கிய மானியங்கள் - மூலதன செலவினம் | 19 | 2,4492,000 | - |
| இயக்கச்செயற்பாட்டு வருமானம் | 1 | 53,938,663 | 44,101,265 |
| வட்டி மற்றும் பிற வருமானம் | 2 | 26,749,089 | 44,782,335 |
| நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம் | 3 | 17,161,545 | 16,074,475 |
| | | 166,241,297 | 164,048,075 |
| **செலவினம்** | | | |
| **கழிக்கப்பட்டது:** | | | |
| நிருவாக மற்றும் தாபன செலவுகள் | 4 | 208,224,998 | 197,934,917 |
| நலன்புரி சார்ந்த செலவுகள் | 5 | 13,627,880 | 10,885,097 |
| நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான செலவுகள் | 6 | 17,556,252 | 18,671,331 |
| நிதி மற்றும் பிற செலவுகள் | 7 | 74,391 | 80,026 |
| | | 239,483,521 | 227,571,371 |
| **வருமானத்திற்கு விஞ்சிய செலவுகள்** | | **(73,242,224)** | **(63,523,296)** |

| | | | |
|---|---|---|---|
| **ஏனைய முழுமையான வருமானம்** | | | |
| தேய்மானம் | | **-** | **48,679,055** |
| **வருமானத்திற்கு விஞ்சிய செலவுகள்** | | (73,242,224) | (14,844,240) |

### 3.2 நிதி நிலை பற்றிய கூற்று

| | குறிப்பு | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள நிலுவையும் | **8** | 21,231,867 | 11,437,498 |
| பொருள் இருப்பு | **9** | 3,797,874 | 3,795,670 |
| வைப்புத்தொகைகள் | **10** | 8,000 | 158,000 |
| முற்கொடுப்பனவுகள் | **10** | 1,800,797 | 967,408 |
| ஒரு ஆண்டினுள் கிடைக்க வேண்டிய இடர் கடன்கள் | **10** | 2,428,065 | 2,694,240 |
| முற்பணங்கள் | **10** | 1,371,686 | 2,874,931 |
| கடனாளிகள் | **11** | 128,517,461 | 11,286,042 |
| கிடைக்க வேண்டிய வேறு தொகைகள் | **11** | 614,576 | 345,152 |
| குறுங்கால முதலீடு- THT, புலமைப்பரிசில் நிதி மற்றும் TRT | **12** | 148,330,000 | 128,200,000 |
| குறுங்கால முதலீடு - PWF | **12** | 76,800,000 | 72,600,000 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **384,900,326** | **234,358,942** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | **14** | 1,301,497,917 | 1,374,828,640 |
| நீண்டகால முதலீடு - THT | **13** | 20,000,000 | 20,000,000 |

| | | | |
|---|---|---|---|
| நீண்டகால முதலீடு - PWF | **13** | 4,000,000 | 8,200,000 |
| கிடைக்க வேண்டிய இடர் கடன்கள் (ஒரு வருடத்திற்குப் பின்னர்) | **10** | 5,780,500 | 7,390,575 |
| **நடைமுறையல்லாத மொத்தச் சொத்துக்கள்** | | **1,331,278,417** | **1,410,419,215** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,716,178,743** | **1,644,778,157** |
| **<u>பொறுப்புக்கள்</u>** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடனாளிகள் மற்றும் திரண்டசெலவுகள் | **15** | 10,559,931 | 15,787,503 |
| முற்பணங்களாக கிடைத்த நிதி | **16** | 7,567,050 | 7,703,670 |
| மீளச்செலுத்தவுள்ள வைப்புத்தொகைகள் | **17** | 2,473,300 | 2,594,400 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **20,640,281** | **26,085,573** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| கணக்காய்வு கட்டணங்களுக்கான நிதி ஒதுக்கீடு | | 700,000 | - |
| பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கீடு | | 30,303,417 | 24,184,697 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **31,003,417** | **24,184,697** |
| **முழுமொத்தப் பொறுப்புக்கள்** | | **51,643,698** | **50,270,270** |
| **தேறிய சொத்துக்கள்** | | **1,664,535,045** | **1,594,507,887** |
| **<u>தேறிய சொத்துக்கள் / பரிமாணம்</u>** | | | |
| திரண்ட நிதி | **18** | 171,309,333 | (4,423,359) |
| **நிதியொதுக்கம்** | | | |
| அரசாங்க மானியம் | | - | 1,000,000 |

| | | | |
|---|---|---|---|
| அரசாங்கம் வழங்கிய மூலதன மானியம் | | 195,336,663 | 219,642,366 |
| ஜனாதிபதி நலன்புரி நிதி | | 80,800,000 | 80,800,000 |
| பண வெகுமானங்கள் | | - | 18,577,319 |
| நன்கொடைகள் | | - | 58,890,541 |
| வாகன நன்கொடைகள் | | 1,987,329 | 2,275,000 |
| ருக்மனி தேவி நிதியம் | | - | 21,176 |
| சொத்துக்களின் மீள்விலைமதிப்பு | | 1,214,706,892 | 1,216,450,453 |
| நாட்டிய மற்றும் நடனக் கலை புலமைப்பரிசில் நிதி | | 394,828 | 394,828 |
| புலமைப்பரிசில் நிதி | | - | 602,665 |
| டவர் மண்டப தொழில்முறை சங்கம் | | - | 276,900 |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள் / பரிமாணம்** | | **1,664,535,045** | **1,594,507,887** |

பக்க இலக்கம்____ முதல்___வரை காட்டப்பட்டுள்ள மேற்குறித்த மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படும் கணக்கு விபரங்களும் மற்றும் குறிப்புப் பக்க இலக்கம்___முதல்___வரை உள்ளடக்கப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பான குறிப்பு விபரங்களும் இந்த இறுதிக் கணக்குகளின் இன்றியமைாத பாகங்களாகும். இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ள குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த இறுதிக் கணக்குகளில் தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்களும் அதனுடன் தொடர்புடைய கணக்குகளுக்கான குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்கு விபரங்களும் திறைசேரியின் கணக்குப் புத்தகங்களுடன் இணக்கல் செய்யப்பட்டுள்ளன எனவும் மற்றும் அவை அந்தப் புள்ளிவிபரங்களுடன் இணங்குகின்றன எனவும் நாம் இத்தால் சான்றுபடுத்துகின்றோம்.

| ..................................... | .................................. | ................................. |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு அதிகாரி | கணக்கீட்டு அதிகாரி | பிரதான நிதி அதிகாரி |

3.3 காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று

**2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று**

| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்கள்** | **2024**<br>**(ரூ.)** | **2023**<br>**(ரூ.)** |
|---|---|---|
| வருமானத்திற்கு விஞ்சிய செலவுகளின் அளவு | (73,242,224) | (63,523,296) |
| கூட்டப்பட்டது: முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | 145,300,613 | (65,526,544) |
| **சீராக்கப்பட்ட வருமானத்திற்கு விஞ்சிய செலவுகளின் அளவு** | **72,058,389** | **(129,049,840)** |
| **<u>சீராக்கல்</u>** | | |
| அகற்றிய சொத்துக்களின் இலாபம் / சொத்துக்களின் மீள்விலை மதிப்பு | (1,768,611) | - |
| தேய்மானம் | 88,339,960 | 96,533,261 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 700,000 | - |
| வட்டி வருமானம் | (26,436,368) | (43,833,685) |
| நன்கொடைகள் மற்றும் மூலதன உதவி - வாகனங்களாக | (287,671) | (700,000) |
| பணிக்கொடை | 6,935,090 | 1,961,380 |
| **தொழிற்படு மூலதன வித்தியாசங்களுக்கு முன்னருள்ள காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள்** | **139,540,789** | **(75,088,884)** |
| பொருள் இருப்பு (அதிகரிப்பு) / குறைவு | (2,204) | (1,088,744) |
| கடனாளிகள் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய தொகை (அதிகரிப்பு) / குறைவு | (117,500,842) | (6,693,880) |
| வைப்புத்தொகை, முற்கொடுப்பனவுகள், முற்பணங்கள் என்பவற்றில் (அதிகரிப்பு) / குறைவு | (683,389) | (95,252) |
| கடனாளிகள் மற்றும் திரண்டசெலவுகள் என்பவற்றில் அதிகரிப்பு / (குறைவு) | (5,187,573) | 1,458,998 |
| முற்பணங்களாக கிடைத்த நிதியில் அதிகரிப்பு / (குறைவு) | (136,620) | 6,072,655 |
| முற்பணங்களாக செலுத்திய நிதியில் அதிகரிப்பு / குறைவு) | 1,503,245 | 4,570,260 |
| மீளச்செலுத்த வேண்டிய வைப்புத்தொகைகளில் அதிகரிப்பு/ (குறைவு) | (121,100) | 589,100 |

| | | |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய இடர் கடன்களில் அதிகரிப்பு / (குறைவு) | 266,176 | 156,968 |
| **தொழிற்படு மூலதன வித்தியாசங்களின் பின்னருள்ள காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள்** | **17,678,483** | **(70,118,779)** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (816,370) | (973,483) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் / (பயன்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **16,862,113** | **(71,092,262)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்கள்** | | |
| விற்பனை, சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் விற்பனை | 1,768,611 | - |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் கொள்வனவு | (16,752,800) | 47,216,426 |
நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்களை நான் உள்ளடக்கவில்லை. அதன் பேரில் எந்த உத்தரவாத முடிவையும் என்னால் வெளியிடுவதற்கு முடியாது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில், மேலே இனங்கண்டறிந்த ஏனைய தகவல்களை வாசிப்பதும், அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் பொருண்மையான பிறழ்வுடையதாக காணப்படுகின்றனவா இல்லையெனில் எனது கண்காய்வில் நான் பெற்ற அறிவுக்கு அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு பொருண்மை அளவில் முரணானதாக காணப்படுகின்றனவா என ஆராய்வதும் என்னுடைய ஒரு பொறுப்பாகும்.

இந்த தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்கு முன்பு நான் பெற்ற மற்ற தகவல்களின் அடிப்படையில் நான் செய்த பணியின் அடிப்படையில், மற்ற தகவல்களில் முக்கியமான தவறான கூற்று இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த உண்மையை அறிக்கை செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன். இந்த விஷயத்தில் என்னிடம் அறிக்கை செய்ய எதுவும் இல்லை.

### 1.4 கணக்காய்வாளரின் நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வுக்கான பொறுப்புகள்

ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கைகள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படும் பொருட்படத்தக்க தவறான அறிக்கைகள் இல்லாதவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிகாரியின் மதிப்பீட்டை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்தில் ஒரு உறுதிப்பாடாகக் கருதப்படும் போதிலும், இலங்கை கணக்காய்வு விதிகளின் படி கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எந்த நேரத்திலும் பொருட்படத்தக்க தவறான அறிக்கைகளை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்க முடியாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனித்தோ அல்லது சேர்ந்தோ பாதிப்பை ஏற்படுத்துவதன்

காரணமாக பொருட்படத்தக்க தவறான அறிக்கைகள் ஏற்படக்கூடியதுடன் இந்த நிதி அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படும் பொருளாதார முடிவுகள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனிக்க வேண்டும்.

இலங்கை கணக்காய்வு விதிகளின் படி கணக்காய்வின் பகுதியாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புகளை நான் மேற்கொண்டு உயர்தொழில் சந்தேகத்தையும் நிர்வகிக்கிறேன். அதோடு,

• வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு கருத்துக்கான அடிப்படையை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படக்கூடிய பொருட்படத்தக்க தவறான அறிக்கைகளால் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணும் மதிப்பீடு செய்வதற்காக சூழ்நிலைக்கு உகந்த கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமலாக்கப்பட்டன. குறிப்பாக காட்டுவதன் காரணமாக ஏற்படும் பொருட்படத்தக்க தவறான அறிக்கைகளிலிருந்து இடம்பெறும் பாதிப்புகளைவிட மோசடிகளால் இடம்பெறும் பாதிப்புகள் பெரியதாக இருப்பதானது தவறான கூட்டுமித்தால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதால், வேண்டுமென்றே விட்டுவிடுவதால், குறிப்பாக காட்டுவதால் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

• உள்ளக கட்டுப்பாடுகளின் செயல்திறன் மீது கருத்து வெளியிடும் நோக்கமில்லாத போதிலும் சூழ்நிலைக்கு உகந்த கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

• பயன்படுத்திய கணக்கியல் கொள்கைகளின் உகந்ததன்மை, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

• நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனம் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக அவசியமாக இருந்தால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏதும் இருக்கிறதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கியலுக்காக நிறுவனம் தொடர்ந்து இயங்குவது தொடர்பான அடிப்படையை உறுதிப்படுத்தும் உகந்தத்தன்மையை முடிவு செய்கிறது. பொருட்படத்தக்க ஏற்றுக்கொள்ள முடியாத தன்மை காணப்படுகிறது என நான் முடிவுக்கு வந்தால், நிதிநிலை அறிக்கைகளில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு மதிப்பீட்டின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அத்தகைய வெளிப்படுத்தல்கள் பொருட்படத்தக்கதாக இல்லாத போதில் எனது கருத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுகளானது கணக்காய்வாளரின் மதிப்பீட்டு தேதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு

ஆதாரங்களின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்து இயங்கும் நிலைமையை முடிவுக்கு கொண்டுவர நேரிடலாம்.

• நிதிநிலை அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுப்பு வாங்கல்கள் மற்றும் தொடர்புகள் உகந்ததாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணை மதிப்பீடு செய்யப்பட்டது.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை பற்றிய தேவைப்பாடுகள்

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலும் பின்வருகின்ற தேவைப்பாடுகளுக்கான விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1. முனைப்பழியுள்ள கருத்து தொடர்பான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவைவுகள் தவிர, கணக்காய்வுக்கு தேவையான சகல வகை தகவல்களையும் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன். மேலும் எனது பரீட்சையிலிருந்து தோன்றிய வரையில், முறையான கணக்குப் பதிவுகள் அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (a) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iii) இன் தேவைப்பாடுகள் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒத்துப்போகின்றன.

2.1.3 சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (l) (d) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் நான் செய்த அனைத்து சிபாரிசுகளும் உள்ளடங்குகின்றன.

2.2 நடைமுறைகள் மற்றும் பெறப்பட்டிருந்த சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த விடயம் எதனையும் நான் அவதானிக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 12 (d) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபையின் ஆளுகை சபையில் உள்ள எந்தவொரு உறுப்பினருக்கும் வணிகத்தின் இயல்பான காரணத்திற்கு அப்பாற்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை இருப்பதாக தெரியவில்லை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (f) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் ஆளுகை சபை வெளியிட்டுள்ள ஏற்புடைய சட்டம், பொது மற்றும் சிறப்பு வழிகாட்டல்கள் ஆகியவற்றிற்கு அதிகார சபை இணங்கவில்லை என்பதை தவிர;

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளுக்கு இணங்காது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஐ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறன்மிக்கதாக, பயனுள்ளதாக உரிய காலத்தில் உரிய சட்டதிட்டங்களுக்கு இணங்க பொருட்பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 ஏனைய விடயங்கள்**

(a) டவர் ஹால் நாடகசாலை பாடல்கள், நடனங்கள், நாடகங்கள் மற்றும் இசையை உற்பத்தி செய்வதற்கும், அத்துடன் ஆராய்ச்சி நடத்தி அதன் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கு அதன் முடிவுகளைப் பயன்படுத்துவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2025 மே 30 ஆம் தேதி வரை எந்த ஆராய்ச்சியும் நடத்தப்படவில்லை, அல்லது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை.

(b) 2024 ஜூலை 16 ஆம் தேதியிட்ட அமைச்சரவை முடிவின்படி, டவர் ஹால் நாடகசாலை அறக்கட்டளையின் சவ்சிரிபாய கட்டிடத்தில் அமைந்துள்ள கட்டுமானத் தொழில் மேம்பாட்டு ஆணையத்தின் அலுவலகம் காலி செய்யப்பட வேண்டும் என்றும், அறக்கட்டளைக்கு செலுத்த வேண்டிய ரூபாய் 145 மில்லியனை உடனடியாக தீர்க்குமாறு நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. எனினும், 2025 ஜூன் 30 ஆம் தேதி வரை (தணிக்கை தேதி), அந்த ஆணையம் அந்த இடத்தை காலி செய்யவில்லை, ரூபாய் 120 மில்லியன் நிலுவையில் இருந்தது, மேலும் தொடர்புடைய அமைச்சகம் அமைச்சரவை முடிவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

டி.எச்.டி. தர்மபால
**செயல். தலைமை தணிக்கையாளர்**

# அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

04.1 மன்றத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

| விஷேட சுட்டி | எதிர்பார்த்த பெறுபேறு விகிதம் (%) உண்மையான பெறுபேறு ரீதியில் | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| ***நிதிப் பிரிவு*** | | | |
| வருடாந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் - 2024 | ✓ | | |
| 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல் | ✓ | | |
| மாதாந்த சம்பளங்களைத் தயாரித்தல் - 2024 | ✓ | | |
| 2024 ஆம் ஆண்டிற்கான மாதாந்த கணக்கு சுருக்க அறிக்கைகளை சமர்ப்பித்தல் | ✓ | | |
| வங்கி இணக்கல் கூற்றுக்களைத் தயாரித்தல் | ✓ | | |
| கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்களை அனுப்புதல் | ✓ | | |
| கணக்குகளைத் தீர்ப்பனவு செய்தல் - 2024 | ✓ | | |
| வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பை நடத்துதல் | ✓ | | |
| 2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தைத் தயாரித்தல் | ✓ | | |
| 2024 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் | ✓ | | |
| ***நிருவாகப் பிரிவு*** | | | |
| நிறுவனத்தினுள் காகிதங்களின் பாவனையைக் குறைத்தல், காகிதாதிகள் பாவனையை முகாமை செய்தல், பயனுள்ள சரியான ஒரு பணிச் சூழலைப் பேணுதல் | | ✓ | |
| பதவியணிக்கான பயிற்சி வேலையரங்குகளை நடத்துதல், அறிவைப் பகிர்ந்துகொள்ளல், பொது நிருவாகம் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துதல் | | | ✓ |
| 2024 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல் | ✓ | | |
| உத்தியோகத்தர்களின் தனியாள் கோவைகளை இற்றைப்படுத்திப் பேணுதல் | ✓ | | |
| சம்பளப் படியேற்றங்களையும், கடன்களையும், லீவுகளையும் அனுமதித்தல் | ✓ | | |

| | | | |
|---|---|---|---|
| செயலாற்றுகை தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல் | ✓ | | |
| வாகனங்களை நிருவகித்தல், காப்புறுதிகளைப் பெற்றுக் கொள்ளல், வருமான வரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல், சேர்விஸ்களை மேற்கொள்ளல் மற்றும் பராமரித்தல் | ✓ | | |
| ***நிகழ்ச்சித்திட்டப் பிரிவு*** | | | |
| நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் | | ✓ | |
| செயல் திட்டத்திற்கு இணங்க நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | | ✓ | |
| ***கல்விப் பிரிவு*** | | | |
| பாடநெறிகளுக்கு புதிதாக மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் | ✓ | | |
| பாடநெறிகளை நடத்துதல் | ✓ | | |
| மதிப்பீடு செய்தல் | ✓ | | |
| சான்றிதழ்களை வழங்குதல் | ✓ | | |

மன்றத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (பெறுகைத் திட்டத்தினதும் செயல் திட்டத்தினதும் அடிப்படையில்) - 2024

| விஷேட சுட்டி | எதிர்பார்த்த பெறுபேறு விகிதம் (%) உண்மையான பெறுபேறு ரீதியில் | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| டவர் மண்டப திரையரங்கின் கடிகார கோபுரத்தின் மேல் பகுதியை புனர்நிர்மாணித்தல் | ✓ | | |
| டவர் மண்டப திரையரங்கை பராமரிக்க அத்தியாவசிய ஒலி உபகரணங்களை சேகரித்தல் | ✓ | | |
| டவர் மண்டப திரையரங்கில் உள்ள மின்விளக்கு முறைமையை மேம்படுத்துதல். | ✓ | | |
| டவர் மண்டப திரையரங்கில் உள்ள பிரதான குளிரூட்டி முறைமையை மேம்படுத்துதல் | ✓ | | |
| டவர் மண்டப திரையரங்கில் உள்ள கதிரைகளைப் பழுதுபார்த்தல் | ✓ | | |
| எல்பின்ஸ்டன் திரையரங்கின் இசைக் கிடங்குப் பிரிவைப் புதுப்பித்தல் | ✓ | | |

| | | | |
|---|---|---|---|
| எல்பின்ஸ்டன் திரையரங்கில் உள்ள ஜெனரேட்டருக்கான மேல் கூரையை நிர்மாணித்தல் | ✓ | | |
| எல்பின்ஸ்டன் திரையரங்கில் குளிரூட்டல் அறையை நிர்மாணித்தல் | ✓ | | |
| எல்பின்ஸ்டன் திரையரங்கில் உள்ள சிசிடிவி கெமரா முறைமைக்கு மேலதிக கெமராக்களை சேர்த்தல் | ✓ | | |
| ருக்மணி தேவி திரையரங்கை மழைநீரில் இருந்து பாதுகாக்க, அலுவலகப் பகுதியின் கூரையை விரிவுபடுத்தி, புதிய பகுதியைச் சேர்த்து, வெள்ளத்தில் மூழ்கிய வீதியைத் திருத்துதல். வருமானம் ஈட்டும் வாய்ப்பாக புதிய வகுப்பறை மண்டபத்தைக் நிர்மாணித்தல். வெள்ளத்தில் மூழ்கிய வீதியை திருத்துதல் | ✓ | | |
| ருக்மணி தேவி திரையரங்கிற்கு தேவையான கதிரைகளை கொள்வனவு செய்தல் | ✓ | | |
| டவர் ஸ்டுடியோவைப் பராமரிக்க அவசியமான புதிய ஒலி உபகரணங்களை சேர்த்தல் | ✓ | | |
| 64-7233 ஜீப் வண்டியின் மூலதன தன்மையிலான வாகன பழுதுபார்ப்பும் மற்றும் மேம்பாடுகளும் | ✓ | | |
| GZ 9749 கெப் வண்டியின் மூலதன தன்மையிலான வாகன பழுதுபார்ப்பும் மற்றும் மேம்பாடுகளும் | ✓ | | |
| PE 1096 ஜீப் வண்டியின் மூலதன தன்மையிலான வாகன பழுதுபார்ப்பும் மற்றும் மேம்பாடுகளும் | ✓ | | |
| தமிழ் மொழி நாடகக் கல்லூரியை நடத்துவதற்குத் தேவையான மேடை உபகரணங்களையும் மற்றும் பொருட்களையும் கொள்வனவு செய்தல் | ✓ | | |
| தமிழ் மொழி நாடகக் கல்லூரியின் செயற்பாட்டிற்குத் தேவையான ஒலி உபகரணப் பொதிகளை கொள்வனவு செய்தல் | ✓ | | |
| தமிழ் மொழி நாடகக் கல்லூரியின் செயற்பாட்டிற்குத் தேவையான இசைக்கருவிகளை கொள்வனவு செய்தல் | | | ✓ |

| | | | |
|---|---|---|---|
| தமிழ் மொழி நாடகக் கல்லூரிக்கு 4 கணனிகளை கொள்வனவு செய்தல் | ✓ | | |
| ***வருடாந்த செயல் திட்டத்தின்படி மேற்கொள்ளப்படும் (நிறுவன வருமானத்தில்) நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றுகை சுட்டிகள்*** | | | |
| நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரியை நடத்துதல் - சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் உயர் டிப்ளோமா பாடநெறிகள் | ✓ | | |
| குறுகிய கால (NVQ -4) பாடநெறிகளை நடத்துதல் - சிங்களம் மற்றும் தமிழ் | | | ✓ |
| பாத்கண்ட நடன/இசை பரீட்சைகளை நடத்துதல் | | ✓ | |
| உலக நாடக தின விழா | ✓ | | |
| சர்வதேச நிகழ்த்து கலை பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களிலும் மற்றும் வெளிநாட்டு நாடக விழாக்களிலும் பிரதிநிதித்துவம் | | ✓ | |
| கலைஞர்களுக்கு வாழ்வாதார உதவித்தொகை வழங்குதல் | ✓ | | |
| டவர் மற்றும் நிகழ்ச்சிக் கலைஞர்களுக்கு மரணாதார கொடுப்பனவுகளை வழங்குதல் | ✓ | | |
| கலைஞர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குதல் | ✓ | | |
| வயதான கலைஞர்களுக்கு மருத்துவ மருத்துவ க்ளினிக்குகளை நடத்துதல் | | | ✓ |
| அபேக்ஷா மேடை விருது "டவர் நாடக விழா" | ✓ | | |
| கலைஞர்களுக்கு புத்தாண்டு பரிசுகளை வழங்குதல் | ✓ | | |
| கோபுர ஒளிமய இசை நிகழ்ச்சிகள் | | | ✓ |
| டவர் ரங்கா யாத்திரை பொழுதுபோக்கு கல்வி நிகழ்ச்சிகளை நடத்துதல் | ✓ | | |
| யூடியூப் செனல் மற்றும் முகநூல் கணக்குகளை பேணுதல் மற்றும் இற்றைப்படுத்துதல் | ✓ | | |
| அகில இலங்கை பாடசாலை நாடகப் போட்டி - 2024 | | | ✓ |
| பௌத்த பக்தி பாடல் இசை நிகழ்ச்சிகளை நடத்துதல் | ✓ | | |
| பொசன் போயா தினத்தை முன்னிட்டு பௌத்த பக்தி பாடல் இசை நிகழ்ச்சியை நடத்துதல் | ✓ | | |

## அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதற்கான செயலாற்றுகை

### 5:1 இனங்காணப்பட்டுள்ள உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகள்

| இலக்குகள் / குறிக்கோள் கள் | இலக்கு | சாதனைகள் சுட்டி | இது வரை அடைந்த சாதனைகளின் விகிதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| 4. தரமான ஓர் கல்வி | 4.7 கற்கும் அனைவரும் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அறிவையும் திறன்களையும் பெறுகின்றார்கள். இதில் நிலையான அபிவிருத்தி மற்றும் நிலையான வாழ்க்கை முறைகள் ஆகியன பற்றிய கல்வி, மனித உரிமைகள், அமைதி மற்றும் வன்முறை இல்லாத கலாச்சாரத்தை ஊக்குவித்தல், உலகளாவிய குடியுரிமை மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையைப் பாராட்டுதல் மற்றும் நிலையான அபிவிருத்திற்கு கலாச்சார ரீதியில் பங்களித்தல் முதலிய அம்சங்கள் உள்ளடங்குகின்றன.<br><br>4.4 ஒழுக்கமான வேலைவாய்ப்புக்கும் மற்றும் தொழில்முனைவோருக்கும் தொழில்நுட்ப மற்றும் தொழில் தகைமைகள் அடங்கலாக பொருத்தமான திறன்களை உடைய இளைஞர்களின்தும் மற்றும் வயதுவந்தவர்களினதும் எண்ணிக்கையை கணிசமாக அதிகரித்தல். | * நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமாதாரிகளை உருவாக்குதல்.<br>* நடனம் மற்றும் இசை டிப்ளோமா பாடநெறிக்கான பாடத்திட்டத்தைத் தயாரித்தல் (சிங்கள மொழி மூலம்).<br>* தொழிற்கல்வி (NVQ -4) பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை<br>* உலக நாடக தின கொண்டாட்டத்தில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை<br>* அபேக்ஷாவே பிரதிமணி மாங்கல்ய மேடை நாடக விழாவை 2024" முன்னிட்டு அரங்கேற்றப்பட்ட நாடகங்களின் எண்ணிக்கை | | | ✓ |
| 1.எங்கும் காணப்படுகின்ற வறுமையை எல்லா விதத்திலும் ஒழித்தல் | 1.2 தேசிய வரையறைகளுக்கு ஏற்ப, அனைத்து வகையான வறுமையிலும் வாழுகின்ற அனைத்து வயதுத் தொகுதியை சேர்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் ஆகியோரின் விகிதத்தை குறைந்தது அரைவாசியால் குறைத்தல். | * மாதாந்த வாழ்வாதார உதவு தொகைகள் வழங்கப்பட்ட கலைஞர்களின் எணணிக்கை<br>* மருத்துவ உதவிகள் வழங்கப்பட்ட கலைஞர்களின் எண்ணிக்கை | | | ✓ |

5.2 நிலையான இலக்குகளின் சாதனைகளும் மற்றும் சவால்களும்

**சாதனைகள்**

- ✓ “அபேக்ஷாவே பிரதிமணி மாங்கல்ய மேடை நாடக விழா 2024” - கொழும்பில் உள்ள முக்கிய அரங்குகளான டவர் திரையரங்கு மற்றும் எல்பின்ஸ்டன் திரையரங்கு ஆகிய திரையரங்குகளில் பயிலுநர்களின் 44 நீண்ட, குறுந்திரைப்படங்கள் மற்றும் குழந்தை மேடை நாடகங்கள் என்பவற்றை காட்சிப்படுத்த டவர் நாடக திரையரங்கு ஒரு வாய்ப்பை வழங்கியது. பார்வையாளர்களை திரையரங்குகளுக்கு ஈர்த்து, திரையரங்குகள் வருமானம் ஈட்டுவதற்கான ஒரு வாய்ப்பையும் வழங்கியது. மேலும் செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி செய்திகள் என்பவற்றின் மூலம் காட்சிப்படுத்தப்பட்ட 44 நாடகங்களைப் பற்றிய விளம்பரத்தை வழங்குவதன் மூலம், அந்த நாடகங்களை பொதுமக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு முடிந்தது. மேலும், நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்கவும், நாடகக் கலையின் மேம்பாட்டிற்கு பங்களிக்கவும் முடிந்தது.

- ✓ 2024 ஆம் ஆண்டிற்கு யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி நாடகம் மற்றும் நிகழ்த்து கலை உயர் டிப்ளோமா பாடநெறிக்கு தகுதிவாய்ந்த 45 இளைஞர்கள் சேர்க்கப்பட்டனர். இதன் மூலம் வடக்கில் உள்ள இளைஞர்களுக்கு நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமா பாடநெறியை கற்க வாய்ப்பு கிடைத்தது.
- ✓ டவர் மண்டப திரையரங்கு மன்றத்துடன் இணைந்த ஜனாதிபதி நலன்புரி நிதி வருமானத்தில் இருந்து 82 கலைஞர்களுக்கு தலா 10,000/- ரூபா வீதம் மாதாந்த வாழ்வாதார உதவித் தொகையும், டவர் மண்டப திரையரங்கு மன்ற வருமானத்தில் இருந்து 40 கலைஞர்களுக்கு தலா 10,000/- ரூபா வீதம் மாதாந்த மருத்துவ உதவித்தொகையும் வழங்கப்பட்டதன் மூலம் வயதான கலைஞர்களின் ஆரோக்கியத்தையும் நலனையும் மேம்படுத்த முடிந்தது.

- ✓ 52 சிங்கள மொழி டிப்ளோமாதாரர்கள், 44 தமிழ் மொழி டிப்ளோமாதாரர்கள் அடங்கலாக 96 மாணவர்களுக்கு நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகளில் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டதன் மூலம், நாடகம் மற்றும் நிகழ்த்து கலைத் துறையில் ஈடுபடுவதற்கும் உயர் கல்வி வாய்ப்புகளை அணுகுவதற்கும் தேவையான தகுதிகளைப் பெற முடிந்தது.

- ✓ நாடகம் மற்றும் நிகழ்த்து கலை உயர் டிப்ளோமா பாடநெறியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 05 பாடப் பிரிவுகளில் மிக உயர்ந்த திறமையை வெளிப்படுத்திய 05 சிங்கள மொழி மூல மாணவர்களுக்கும் 05 தமிழ் மொழி மூல மாணவர்களுக்கும் தலா ரூ.50,000/- பெறுமதியான 10 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

- ✓ டவர் நாடகம் மற்றும் நிகழ்த்து கலைக் கல்லூரியின் சிங்களம் மற்றும் தமிழ் மொழி நாடகப் பாடசாலைகளை சேர்ந்த 96 டிப்ளோமாதாரிகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இளங்கலை கல்வி பட்டப்படிப்புக்கு சேர்க்கப்பட்டனர். இவர்களில் 52 மாணவர்கள் (சிங்கள மொழி) இலங்கை நாவல திறந்த பல்கலைக்கழகத்திலும், மேலும் 44 (தமிழ் மொழி) மாணவர்கள் யாழ்ப்பாணக் கிளையிலும் சேர்க்கப்பட்டனர்.

- ✓ 2024 ஆம் ஆண்டில், நாட்டில் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்கல்வி நடிப்பு பாடநெறியின் (NVQ - 4) இரண்டாவது தொகுதிக்கு 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

- ✓ மிகவும் தேவையுள்ள நடனம் மற்றும் இசை (சிங்கள மொழி) டிப்ளோமா பாடநெறியைத் தொடங்குவதற்கு பொருத்தமான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது.

- ✓ யுனெஸ்கோ தாபனத்தினால் தாபிக்கப்பட்ட சர்வதேச நாடக மன்றத்தின் இலங்கை நிரந்தர பிரதிநிதியாக செயற்படும் டவர் மண்டப திரையரங்கு மன்றம், உலக நாடக தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27 ஆம் திகதி ஒரு கொண்டாட்ட நிகழ்வை ஏற்பாடு செய்கின்றது. 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி கொழும்பில் உள்ள சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளை சேர்ந்த 800 எண்ணிக்கைக்கும் அதிகமான மாணவர்களின் பங்கேற்புடன், மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கில் ஒரு கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது.

**<u>சவால்கள்</u>**

- ✓ யாழ்ப்பாணம் கோபுர நாடகப் பள்ளியில் தமிழ் மொழி மூலம் செயற்படுத்தப்படும் நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகள் தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறிக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த இளைஞர்களை ஈர்த்தல்.

- ✓ இசை மற்றும் நாட்டியம் பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், அவற்றுக்கான அங்கீகாரம் கிடைப்பதில் அதிக காலம் எடுத்தல்.

- ✓ ஆற்றல்மிக்கவர்களை அறிமுகப்படுத்தும் புதிய மேடை நாடகங்களைப் பார்க்க போதுமான பார்வையாளர்கள் இல்லாமை.

- ✓ டவர், எல்பின்ஸ்டன் மற்றும் ருக்மணி தேவி ஆகிய திரையரங்குகளால் மாதத்திற்கு சுமாராக 2 மில்லியன் ரூபா மின்சாரக் கட்டணத்தை செலுத்த நேரிடுதல்.

- ✓ கொழும்பு நகரில் அதிக வசதிகளுடன், குறைந்த விலையில் திரையரங்குகளைப் பராமரிக்க செலவு அதிகரித்தல், அதிக வசதிகளுடன் கூடிய திரையரங்குகள் உருவாகியுள்ளமை.

- ✓ இன்றைய உலகம் ஒரு புதிய தொழில்நுட்ப யுகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில், அழகியல் கலைப் பாடங்களுக்கு குறைந்த கவனம் செலுத்தப்படுகின்றமை, இலங்கையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக கலைகளுக்கான வேலை வாய்ப்புகள் குறைந்து வருகின்றமை, நிகழ்த்துக் கலைப் பாடங்களைப் பயில்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றமை.

# அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய குறிப்பு

6.1 ஆளணி மகாமைத்துவம்

**டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை - 2024**

**உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் உறுப்பினர்கள்**

10 டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் தலைவர்/ இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் கௌரவ பிரமர் தினேஷ் குணவர்த்தன - 2022.07.20 - 2024.09.23

11 டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் தலைவர்/ இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் கௌரவ பிரமர் கலாநிதி ஹரினி அமரசூரிய - 2024.09.24 ஆம் திகதி முதல்

12 கௌரவ நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க - 2022.12.21 – 2024.09.22
(நிதி அமைச்சரின் பிரதிநிதி)
கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் - 2024.12.12 ஆம் திகதி முதல்

13 கௌரவ அரச சேவைகள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன - 2022.07.20 - 2024.09.23
கௌரவ அரச சேவைகள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன - 2024.12.12 ஆம் திகதி முதல்

14 கௌரவ புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க - 2022.05.20 - 2024.09.24
கௌரவ புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி - 2024.12.12 ஆம் திகதி முதல்

15 பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க - 2022.07.23 - 2024.09.23
பிரதமரின் செயலாளர் திரு ஜி. பிரதீப் சப்புதந்திரி - 2024.12.12 ஆம் திகதி முதல்

16 புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு சோமரத்ன விதானபத்திரண - 2022.05.24 - 2024.05.31
புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு புவனக்க ஹேரத் - 2024.06.03 - 2024.09.24
புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு ரஞ்சித் ஆரியரத்ன - 2024.09.24 - 2024.11.19

17 கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி வசந்தா பெரேரா - 2024.01.01 - 2024.03.31
கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி திலக்கா ஜயசுந்தர - 2024.04.02 - 2024.11.19

18 புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் (தேசிய மரபுரிமைகள் பிரிவு) மேலதிக செயலாளர் (அபிவிருத்தி திருமதி கே.ஏ.டீ.ஆர். நிசாந்த ஜயசிங்க - 2022.12.21 - 2024.10.30

19 கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் திருமதி ஜே.எம். சந்திராணி ஜயவர்த்தன - 2022.06.23 – 2024.11.03

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் திரு பாலித்த நாணயக்கார - 2024.11.04 ஆம் திகதி முதல்

**<u>கௌரவ பிரதமரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்</u>**

**<u>(நியமனத் திகதியிலிருந்து 03 ஆண்டுகள் காலத்திற்கு)</u>**

05 திரு சுனில் சரத் பெரேரா - 2022.12.21 - 2024.10.15
06 திருமதி சரித்தா பிரியதர்ஷனி பீரிஸ் - 2022.12.21 - 2024.10.15
07 திரு பாலித்த சில்வா - 2022.12.21 - 2024.10.15
08 திரு நடராஜா காரத்திக் - 2022.12.21 - 2024.10.15

- கலாநிதி திரு டீ.எம்.எஸ். திஸாநாயக்க, பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப திரையரங்கு மன்றம்

**<u>பொதுத் திறைசேரியின் பிரதிநிதிகள்</u>**

**பொதுத் திறைசேரியின் பிரதிநிதிகள்**
திருமதி ரேணுக்கா கொலம்பகே - 2022.12.21 - 2024.11.27
பிரதான நிதி அதிகாரி, நிதி அமைச்சு

**<u>சிரேஷ்ட தகவுடைய அதிகாரிகள்</u>**

1. பணிப்பாளர் நாயகம் - கலாநிதி திரு டீ.எம்.எஸ். திஸாநாயக்க
2. பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் அபிவிருத்தி) - திரு நிபுன திஸாநாயக்க
3. பணிப்பாளர் (நாடக ஊக்குவிப்புக் கல்வி மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்) பதவியில் வெற்றிடம் நிலவுகின்றது
4. உதவிப் பணிப்பாளர் (நிதி) - திரு கசுன் தேசப்பிரிய 2022.09.20 ஆம் திகதி முதல் 2024.03.04 ஆம் திகதி வரை
   - திருமதி டப்ளியு.டீ. பெரேரா 2024.04.29 ஆம் திகதி முதல் 2024.09.29 ஆம் திகதி வரை
   - திரு இமால் சமரகோன் 2024.10.01 ஆம் திகதி முதல் இன்று வரை
5. உதவிப் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் அபிவிருத்தி) - (பதவியில் வெற்றிடம் நிலவுகின்றது)
6. பிரதிப் பணிப்பாளர் (நாடக ஊக்குவிப்பு, கலைஞர்கள் நலன்புரி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் திரு சந்தன விஜேசுந்தர பண்டார
7. உதவிப் பணிப்பாளர் (கல்வி ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு) - (பதவியில் வெற்றிடம் நிலவுகின்றது)

உதவிப் பணிப்பாளர் (தமிழ் நாடக ஊக்குவிப்பு) - கலாநிதி திரு சன்முக சர்மா

## டவர் மண்டப திரையரங்கு மன்றம் - அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணி பற்றிய விபரங்கள்: 2024.12.31 ஆம் திகதிற்கு

| சேவை வகுதி | சம்பளக் குறியீடு | பதவி | அனுமதிக்கப் பட்டுள்ள ஆளணி எண்ணிக்கை | உண்மையான ஆளணி எண்ணிக்கை | வெற்றிடம் நிலவும் ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | HM-2-1 | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| | HM-1-1 | பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் நிருவாகம்) | 1 | 1 | 0 |
| | | பணிப்பபாளர் (நாடக ஊக்குவிப்பு கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்) | 1 | 0 | 1 |
| | MM-1-1 | உதவிப் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் அபிவிருத்தி) | 1 | 0 | 1 |
| | | உதவிப் பணிப்பாளர் (நிதி) | 1 | 1 | 0 |
| | | உதவிப் பணிப்பாளர் (கல்வி ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு) | 1 | 0 | 1 |
| | | உதவிப் பணிப்பாளர்/நாடக ஊக்குவிப்பு கலைஞர் நலன்புரி மற்றும் நிகழ்ச்சிகள்) | 1 | 1 | 0 |
| | | உதவிப் பணிப்பாளர் (தமிழ் நாடக ஊக்குவிப்பு) | 1 | 1 | 0 |
| மூன்றாம் நிலை | JM-1-1 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| | | முகாமையாளர் (நாடகம்) | 3 | 3 | 0 |
| | | உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| | MA-4 | அபிவிருத்தி உதவியாளர் (சந்தைப்படுத்தல்) | 1 | 1 | 0 |
| | | அபிவிருத்தி உதவியாளர் (கணக்கியல் மற்றும் நிதி) | 1 | 1 | 0 |
| | | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் (பாடநெறிகள்) | 1 | 1 | 0 |
| | | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் (நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரம்) | 1 | 1 | 0 |
| | | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் (நலன்புரி) | 1 | 1 | 0 |
| | | சிரேஷ்ட ஒலிக் கட்டுப்பாட்டாளர் | 1 | 1 | 0 |
| இரண்டாம்நிலை | MA-2-1 | பணி மேற்பார்வையாளர் - சிவில் | 1 | 1 | 0 |
| | | தொழில்நுட்ப உதவியாளர் | 1 | 0 | 1 |
| | | ஒலிக் கட்டுப்பாட்டாளர் | 1 | 0 | 1 |
| | | கணக்கெழுதுநர் | 1 | 1 | 0 |
| | MA-1-1 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) | 26 | 16 | 10 |
| | | முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) | 1 | 1 | 0 |
| | | முகாமைத்துவ உதவியாளர் (தமிழ் பேசும்) | 1 | 1 | 0 |
| ஆரம்பநிலை | PL-3 | சாரதி | 6 | 3 | 3 |
| | | மின்னியலாளர் | 1 | 1 | 0 |
| | | ஒலிசாதன இயக்குநர் | 4 | 1 | 3 |
| | | திரையரங்கு ஒளிவடிவமைப்பாளர் | 3 | 3 | 0 |
| | | பராமரிப்பாளர் | 1 | 1 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | PL-2 | திரையரங்கு ஒளிவடிவமைப்பாளர் உதவியாள் | 3 | 2 | 1 |
| | PL-1 | அலுவலக உதவியாள் | 7 | 3 | 4 |
| | | திரையரங்கு உதவியாள் | 8 | 4 | 4 |
| | | கட்டுப்பாட்டு அறை உதவியாளர் | 1 | 0 | 1 |
| | | திரையரங்கு சேவை ஸ்டுடியோ உதவியாளர் | 1 | 1 | 0 |
| | | நூதனசாலை/காப்பக உதவியாளர் | 1 | 1 | 0 |
| | | ஒலிசாதன இயக்குநர் உதவியாள் | 3 | 3 | 0 |
| | | புத்தகங்கள் விற்பனை உதவியாள் | 1 | 1 | 0 |
| | | மொத்தம் | 91 | 60 | **31** |

## பிரத்தியேகமான முறையில் அனுமதிக்கப்பட்டுள்ள பதவிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம்நிலை | MA-2-1 | கணனி இயக்குநர் | 01 | 01 | 0 |
| ஆரம்பநிலை | PL-2 | முகாமைத்துவ உதவியாளர் | 02 | 02 | 0 |
| | | முழு மொத்தம் | 94 | 63 | **31** |

ஒரு முகாமைத்துவ உதவியாளருக்கும் மற்றும் ஒரு ஒளிமின்விளக்கு தொழில்நுட்ப வல்லுநருக்கும் 5 ஆண்டுகள் சம்பளமற்ற தீவுக்கு வெளியால் இருப்பதற்கான லீவு வழங்கப்பட்டுள்ளது.

## பதவி விலகல்கள் - 2024.12.31 ஆம் திகதிற்கு

| இலக்கம் | பெயர் | பதவி | நியமனத் திகதி | பதவி விலகி திகதி |
|---|---|---|---|---|
| 01 | திரு எஸ்.கே. தேசப்பிரிய | உதவிப் பணிப்பாளர் (நிதி) | 2022-09-20 | 2024-03-04 |
| 02 | திரு ரந்திக்க ஜயனிந்து | திரையரங்கு ஒளிவடிவடைப்பாளர் உதவியாள் | 2022-10-03 | 2024-04-16 |
| 03 | செல்வி மதூஷா தேஷானி | முகாமைத்துவ உதவியாளர் | 2019-08-01 | 2024-05-07 |

## ஓய்வுபெறல் - 2024.12.31 ஆம் திகதிற்கு

| இலக்கம் | பெயர் | பதவி | நியமனத் திகதி | ஓய்வுபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01 | திரு டப்ளியு.ஏ. ஸ்ரீ அனுர உபேசிங்க | திரையரங்கு உதவியாள் | 1995-12-13 | 2024-05-31 |

**புதிய நியமனங்கள் - 2024.12.31 ஆம் திகதிற்கு**

| இலக்கம் | பெயர் | தற்போதைய பதவி | புதிய பதவி | புதிய பதவிற்கு நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01 | திரு தனுஷ்க நயனகுமார | அலுவலக உதவியாள் | திரையரங்கு ஒளிமின்விளக்கு வடிவமைப்பாளர் | 2024-09-13 |

**பதில் கடமைப் பதவிகளுக்கான நியமனங்கள் - 2024.12.31 ஆம் திகதிற்கு**

| இலக்கம் | பெயர், பதவி மற்றும் நிறுவனம் | பதில் கடமை பார்த்த பதவி | பதில் கடமை பார்த்த காலப்பகுதி |
|---|---|---|---|
| 01 | திருமதி டப்ளியு.டீ. பெரேரா, கணக்கு உத்தியோகத்தர், ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் | உதவிப் பணிப்பாளர் (நிதி) | 2024-04-29 ஆம் திகதி முதல் 2024-10-29 ஆம் திகதி வரை |

**ஆட்சேர்ப்புகள் - 2024.12.31 ஆம் திகதிற்கு**

| இலக்கம் | பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 01 | திரு இ.ஐ.ஏ. சமரகோன் | உதவிப் பணிப்பாளர் (நிதி) | 2024-10-01 |
| 02 | நெஷான் தனுஷ்க பெரேரா | திரையரங்கு ஒளிமின்விளக்கு வடிவமைப்பாளர் உதவியாள் | 2024-09-13 |

6.2 மன்றத்தின் செயலாற்றுகையை மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை பாதிக்கும் விதம்

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி 91. நிரந்தர ஊழியர்கள் 63. அதன்படி, வெற்றிடமாக உள்ள பதவிகள் பின்வருமாறு:

01. பணிப்பாளர் (நாடக ஊக்குவிப்பு கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்) 01
02. உதவிப் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் அபிவிருத்தி) 01
03. உதவிப் பணிப்பாளர் (கல்வி ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு)
01
04. தொழில்நுட்ப உதவியாளர் 01
05. ஒலிக் கட்டுப்பாட்டாளர் 01
06. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) 10

07. சாரதி 03
08.  ஒலிசாதன இயக்குநர் 03
09. திரையரங்கு மின்ஒளி வடிவமைப்பாளர் உதவியாள் 01
10.  அலுவலக உதவியாள் 04
11.  திரையரங்கு உதவியாள் 04
12. கட்டுப்பாட்டு அறை உதவியாளர் 01

அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் நிறுவன செலவுகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றின் காரணமாக, மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை.

எனினும், அத்தியாவசிய பதவிகளுக்கான தேவை காரணமாக பல புதிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டபோதிலும், பணிப்பாளர் (நாடக ஊக்குவிப்பு, கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்), உதவிப் பணிப்பாளர் (கல்வி ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு) மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் போன்ற பல பதவிகளுக்கு பொருத்தமான பரீட்சாத்திகள் இல்லாததால் ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை.

அதன்படி, டவர் மண்டப திரையரங்கு மன்றத்தால் நிருவகிக்கப்படும் நாடகக் கல்லூரிகளில் பணிப்பாளர் (நாடக ஊக்குவிப்பு, கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (கல்வி ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு) ஆகிய அத்தியாவசிய பதவிகளுக்கு நியமிக்க இயலாமை காரணமாக பாதுகாப்பு சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது.

மேலும், தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு நிரந்தரமாக ஒருவரை நியமிக்க முடியாததால், நிறுவன நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்குவது கடினமாக இருந்தது.

## 6.3 மனித வளங்கள் அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப் பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் கால வரையறை | ஒட்டுமொத்த முதலீடு | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | பெறுபேறு / பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|
| 01.JM மற்றும் MA உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சி | 09 | 150 மணித்தியாலம் | ரூ. 19,800.00 | உள்நாட்டு | பல இன மக்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான வசதி |
| 02.சிங்க மொழித் திறன் பயிற்சி | 01 | | ரூ. 5,113.64 | உள்நாட்டு | பல இன மக்களுடன் ஒருங்கிணைந் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 150 மணித்தியாலம் | | | து செயற்படுவதற்கான வசதி |
| 03.ஆரம்பநிலை உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சி | 07 | 100 மணித்தியாலம் | ரூ. 8,898.33 | உள்நாட்டு | நாளாந்த கடமைப் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்ற தேவையான அறிவு விருத்தி |

மன்றத்தின் செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்களிக்கும் பணியாளர்களால், மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வழங்கப்படும் பயிற்சியின் ஊடாக தமது விடயம் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ள முடிந்தது.

இந்தப் பயிற்சியின் மூலம் மன்றத்தின் செயல்திறன் உயர் மட்டத்தை எட்டியுள்ளது எனவும், இந்தப் பயிற்சியின் மூலம் ஊழியர்களின் மனப்பான்மை கணிசமாக வளர்ந்திருப்பதால், அவர்களின் செயல்திறன் அதிகரித்து, அவர்கள் தமது கடமைகளை சரிவர நிறைவேற்ற முடிந்தது எனவும், இது நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு பங்களித்துள்ளது எனவும் குறிப்பிடலாம்.

# 07 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | **கீழ்காணும் நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் குறித்த தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 1.2 | அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு | அனுசரிக்கப் படுவதில் லை | ஒரு அரை அரச நிறுவனம் என்பதால் இந்தக் கணக்குகள் பயன்படுத்தப் படுவதில்லை. | |
| 1.3 | தொழில்முயற்சி மற்றும் முற்பணக் கணக்கு (வணிகமுற்பணக் கணக்கு) | அனுசரிக்கப் படுவதில் லை | | |
| 1.4 | களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு | அனுசரிக்கப் படுவதில் லை | | |
| 1.5 | விஷேட முற்பணக் கணக்கு | அனுசரிக்கப் படுவதில் லை | | |
| 1.6 | ஏனையவை | அனுசரிக்கப் படுவதில் லை | | |
| 2 | **கணக்குப் புத்தகங்களும் மற்றும் ஆவணங்களும் பேணப்பட்டுள்ள மை (நி. பி. கு. இலக்கம் 445)** | | | |
| 2.1 | 267/2018 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 2.2 | தனியாள் வேதனாதிகள் பட்டியல் / தனியாள் | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேதனாதி அட்டைகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்கு சுருக்க அறிக்கைகளும் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்க அறிக்கைகளும் அமைச்சுக்கு அனுப்பப்படுகி ன்றன. மேலும் அமைச்சினால் உரிய அறிக்கைகள் திறைசேரிக்கு அனுப்பப்படுகி ன்றன. | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 2.7 | பொருட்பதிவேட்டு ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 2.8 | பொருள் இருப்பு ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 2.9 | நட்ட இழப்பு ஆவணங்கள் | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | | | |
| 2.10 | பொறுப்புக்கள் அட்டவணை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 2.11 | உப அட்டைப் புத்தக ஆவணங்கள் (GAN 20) இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டிற்கான பணிகள் ஒப்படைக்கப்படுதல் (நி .இ .கு.பி .135)** | | | |
| 3.1 | திணைக்களத்தினுள் நிதி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது பற்றி திணைக்களத்தினுள் விழிப்பூட்டப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு உத்தியோகத்தர்களினால் அல்லது அதற்கு அதிகமான உத்தியோகத்தர்களினால் அனுமதிக்கப்படும் வகையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் பற்றிய சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சம்பள அட்டை மென்பாகப் பொதி | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படும் போது பொறுப்புக்கூறும் கணக்காளரின் கட்டுப்பாட்டில் மேற்கொள்ளப்படுதல் | | | |
| 4 | **வருடாந்தத் திட்டங்கள் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயல் திட்டங்கள் தயாரித்தல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டங்கள் தயாரித்தல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 4.3 | வருடாந்த பெறுகைத் திட்டங்கள் தயாரித்தல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு (NDB) சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 5 | **கணக்காய்வு விசாரணைகள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் அதிபதியினால் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு சகல கணக்காய்வு வினாக்களுக்கும் உரிய பதில்கள் சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி இலக்கம் .கு .பி .134 (2) DMA/1-2019 இன் பிரகாரம் ஆண்டு ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 6.4 | நிதிப் பிரமாணக் குறிப்பு இலக்கம் 134 (3) இன் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை இலக்கம் 1-2019 இன் பிரகாரம் குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் ஆகக்குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ள ன. | 2025 ஆம் ஆண்டில் 04 கணக்காய் வு மற்றும் முகாமைத்து வக் குழுக் குழுக்களை நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. |
| 8 | **சொத்துக்கள் முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் கொள்வனவு மற்றும் சொத்துக்கள் அகற்றல் தொடர்பான விபரங்கள் கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 8.2 | மேற்குறித்த சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம், அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் செயற்படுத்தப்படுவ தை ஒருங்கிணைப்பதற் கு பொருத்தமான ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அந்த | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள் கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு அறிவிக்கப்படுதல் | | | |
| 8.3 | 05/2016 ஆம் இலக்கப் பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு குறித்த அறிக்கைகள் உரிய தினத்திற்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 8.4 | வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் இருந்து கண்டறிந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் என்பன சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 8.5 | பாவனைக்கு ஒவ்வொத பொருட்கள் அகற்றல் நி இலக்கம் .கு .பி .772 இன் மேற்கொள்ளப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 9 | **வாகனங்கள் முகாமைத்துவம்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.1 | பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 9.2 | வாகனங்கள் பாவனைக்கு ஒவ்வாததாக மாறி 06 மாதத்திற்கு குறையாத ஒரு காலப் பகுதியினுள் அந்த வாகனங்கள் அகற்றப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 9.3 | வாகனங்களின் பதிவுப் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்ப டுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகனத்தினதும் விபத்து தொடர்பாக நி இலக்கம் .கு .பி . 103,104,109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனை | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீண்டும் மேற்கொள்ளப்படுதல் | | | |
| 9.6 | குத்தகை காலத்தின் பின்னர், குத்தகை வாகனங்களுக்கான உரிமை மாற்றிப் பெற்றுக் கொள்ளப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 10 | **வங்கிக் கணக்குகள் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய தினத்தில் வங்கி இணக்கல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டு முதல் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொணரப்பட்ட இயங்காத வங்கிக் கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 10.3 | வங்கி இணக்கல் கூற்றுக்களில் இருந்து கண்டறிந்து சீராக்க வேண்டி இருந்த நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அந்த நிலுவைகள் ஒரு மாத காலத்திற்குகள் தீர்ப்பனவு செய்யப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 11 | **நிதிகளின் குறைவான பயன்பாடு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 11.1 | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிகள் அவற்றின் வரையறையை விஞ்சாமல் செலவு செய்யப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 11.2 | நி இலக்கம் .கு .பி .94 (1) இன் பிரகாரம், ஏற்பாடு செய்த நிதிகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் குறித்த ஆண்டு இறுதியில் எஞ்சிய நிதியின் வரையறை விஞ்சா வகையில் பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 12 | **அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு** | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 12.1 | வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 12.2 | நிலுவையாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கு அதிக காலம் நிலுவையாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் தீர்ப்பனவு செய்யப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | தீர்ப்பனவு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் தாண்டிய வைப்புக்கள் தொடர்பாக நி .கு .பி . 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | ஒரு அரை அரச நிறுவனம் என்பதால் இந்தக் கணக்குகள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்குகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | பயன்படுத்தப் படுவதில்லை. | |
| 14 | **வசக்கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டு இறுதியில் கணக்குப் புத்தகத்தில் உள்ள நிலுவை திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | ஒரு அரை அரச நிறுவனம் என்பதால் இந்தக் கணக்குகள் பயன்படுத்தப் படுவதில்லை. | |
| 14.2 | நி இலக்கம் .கு .பி .371 இன் பிரகாரம் வழங்கிய சமயோசித வசக்கட்டுநிதி, குறித்த கரும பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலத்திற்குகள் தீர்ப்பனவு செய்யப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | பெரும்பாலான வசக்கட்டுநிதிகள் ஒரு மாதத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட்டாலும், சில வசக்கட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் இதுபோன்ற விடயங்கள் நிகழாமல் இருப்பதற்கு நடவடிக்கை ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. | |
| 14.3 | நி இலக்கம் .கு .பி .371 இன் பிரகாரம் அனுமதித்த வரையறை விஞ்சாத வகையில் சமயோசித வசக்கட்டுநிதி வழங்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.4 | வசக்கட்டுநிதிக் கணக்கு நிலுவை திறைசேரியின் கணக்குப் புத்தகங்களுடன் மாதாந்தம் இணக்கல் செய்யப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | ஒரு அரை அரச நிறுவனம் என்பதால் இந்தக் கணக்குகள் பயன்படுத்தப் படுவதில்லை. | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | குறித்த விதிகளுக்கு இணங்க, சேகரித்த வருமானத்தில் மீள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | ஒரு அரை அரச நிறுவனம் என்பதால் இந்தக் கணக்குகள் பயன்படுத்தப் படுவதில்லை. | |
| 15.2 | சேகரித்த வருமானம், வைப்புக் கணக்குக்கு வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | | |
| 15.3 | நி இலக்கம் .கு .பி .176 இன் பிரகாரம் நிலுவையாக உள்ள வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | | |
| 16 | **மனித வளங்கள் முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி வரையறையினுள் பதவியணி பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 16.2 | பதவியணியின் ஒவ்வொரு ஊழியருக்கும் கடமைப் பணிகள் பட்டியல் எழுத்தில் பெற்றுக் கொடுக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 17 | **பொது மக்களுக்கு தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டத்திற்கும் மற்றும் விதிமுறைகளுக்கும் இணங்க ஒரு தகவல் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கப்படுவது தொடர்பான ஒரு ஆவணம் பேணப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 17.2 | திணைக்களம் பற்றிய தகவல்கள் அதன் இணையத் தளத்தின் ஊடாக வழங்கப்படுதல், இணையத் தளத்தின் ஊடாக அல்லது மாற்றுவழியின் ஊடாக திணைக்களம் பற்றி பொது மக்கள் தமது பாராட்டுக்களை / முறைப்பாடுகளை தெரிவிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.3 | தகவல் அறிவதற்கான சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகளாவது அல்லது ஒரு தடவையாவது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 18 | **பிரஜைகள் சாசனத்தை செயற்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 ஆம் இலக்க 05/2018 (1) ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையினதும் மற்றும் முகாமைத்துவ அமைச்சினதும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுதல் | அனுசரிக்கப் படுவதில்லை | தயாரிக்கப்பட்டு வருகின்றது. | |
| 18.2 | அந்த சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை தயாரித்து செயற்படுத்தும் பணிகளை கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் திணைக்களத்தினால் ஒரு முறையியல் தயாரிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுவதில்லை | மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.<br>மேலும் இந்த பிரஜைகள் சாசனத்தை அதனுள் உள்ளடக்கி தயாரிக்க திட்டமிடப் பட்டுள்ளது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | **மனித வள அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் 02 ஆம் இலக்க மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் ஒரு மனத வளத் திட்டம் தயாரிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 19.2 | பதவியணியில் உள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் ஒரு வருடத்திற்கு 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்பு மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | நிதி நெருக்கடி காரணமாக, அனைத்து ஊழியர்களுக்கும் 12 மணித்தியால பயிற்சியை வழங்க முடியவில்லை. இதனை 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. | |
| 19.3 | மேற்குறித்த சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்தப் பதவியணிக்கும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுதல் | அனுசரிக்கப் படுவதில் லை | 2023.11.30 ஆம் திகதிய 02/2018(I) ஆம் இலக்கப் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் படுவதில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்குறித்த சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகரம் மனித வள அபிவிருத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுவ தற்கான பொறுப்பு சாட்டப்பட்டு ஒரு அதிகாரி நியமிக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |
| 20 | **கணக்காய்வு வினாக்களுக்கு பதில் அளித்தல்** | | | |
| 20.1 | சென்ற ஆண்டுகளுக்கு கணக்காய்வாளர் அதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் கணக்காய்வு பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கப்படுதல் | அனுசரிக்கப் படுகின்றது | | |